உ

கணபதிதுணை.

யாழ்ப்பாண நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ

ஆறுமுக நாவலர் அவர்கள்

சரித்திரச் சுருக்கமும்

அவர்களியற்றியருளிய

தனிப்பா மாலையும்.

இவை

நாவலர் அவர்கள் திருவுருவப் படத்தோடு

யாழ்: சி. செல்லையா பிள்ளையால்

தொகுத்து

வெளிப்படுத்தப்பட்டன.

மீனம்பாள் அச்சியந்திரசாலை

கொழும்பு, கொம்பனித்தெரு.

COPY RIGHT REGISTERED

1914.

கொழும்பிற் "சிறுப்பு"

உத்தியோகத்தைக் கௌரவத்தோடு

நெடுங்காலம் நடாத்தி,

யாவராலும் நன்குமதிக்கற் பாடுடையராய்ப், பின்

நகுலேச்சுரத்தைப் பிற்கால உறைவிடமாகக்

கொண்டு,

தர்ம மடாலய மொன்றை அங்கே

அமைத்து,

புண்ணியமும் புகழும் நன்மக்கட் பேறும்

ஒருங்கே சித்தித்து வாழும்

பிரபு சிகாமணி

ஸ்ரீமான் சு. கதிர்வேற்பிள்ளை யவர்களுக்கு;

அவர்கள் நெடுங்காலமாகச் செய்துவரும்

பதிபுண்ணிய பரிபாலனம், கிருஷி வர்த்தக

வித்தியா விருத்தி முதலிய அரும் பெருஞ்

செயல்களைக் குறித்து

இந்நூல், அவர்களுக்கு அநுமதிகொண்டு,

அர்ப்பணஞ் செய்யப்பட்டது.

உ

பதிப்புரை.

தனிமொழியுந் தேன்மொழியுமாகிய தமிழ்ப் பாஷையும், தனக்கு ஒப்பும் உயர்வுமில்லாத சைவ சமயமும் நம்தேயம் வேற்றரசர் கைப்பட்டபின் அருகுதலைக்கண்டு, இருபதாம் வயதிலே தமக்கு வாய்த்த உத்தியோகத்தையும் உறவினர் தொடர்பையும் பரித்தியாகஞ் செய்து, முப்பத்திரண்டு வருடகாலம் தமது காலத்தையும் கருத்தையும் அவற்றின் விருத்திப் பொருட்டுச் செலவிட்டு, ஒழுக்கமெனும் வரம்பைக் கனவினும் கடவாது நின்று தமிழ் நாட்டிற் கீர்த்தி படைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஒருவரேயாம்.

அவநெறியாயவை எவையோ அவையாவையும் முற்றக்களைந்து சிவநெறி வளர்த்த திப்பிய குணத்தர் நாவல ரவர்களேயன்றி, அவர்களின் முன்னுவது பின்னுவது வேறெவருமிலர் என்பதை மறுப்பவர் யாவர்? இக்காரணம் ஒன்றைக்குறித்தே தமிழ் நாட்டிலே அவர்களுக்கு வேந்தனையொத்த செல்வாக்கும் கௌரவமும் யாவராலும் நன்குமதிப்பும் உண்டாயின.

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையில் பரீக்ஷையிற் சித்திபெற்ற மாணாக்கர்களுக்குச் சென்ற எப்பிரில்-மீ 26-உ பரிசளிக்கப்பட்ட சபைக்கண், சென்னபட்டணத்து ஹைகோட்டு நீதிபதிகளு ளொருவராகிய கனம் பொருந்திய ப்ரம்ம ஸ்ரீ T. சதாசிவ ஐயர் அவர்கள் (Hon'ble Mr. T. Sathasiva Iyer, High Court Judge, Madras.) அக்கிராசனபதியாகவிருந்து டிஸ்திறிக் முனிசிப், றிஜிஸ்திரார், இஞ்சினீர், வக்கீல் முதலிய பல உத்தியோகத்தர் பிரபுக்கள் சமுகத்திலே, அவ்வித்தியசாலை ஸ்தாபகராகிய நாவலர் அவர்களைக் குறித்துப் பேசியபொழுது "நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப்போலத் தமிழ்ப்பாஷையையும் நல்லொழுக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உபகாரஞ் செய்தவர் வேறொருவருமில்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவருமில்லை"யென்று வெளிப்பட உரைத்தமைபோலவே, மனத்தூய்மையுடைய நல்லோர் இன்றும் நாவலர் அவர்கள் பெருமைகளை யெடுத்து வாயாரப்போற்றி மகிழ் கூருகின்றார்கள்.

வித்தியாலைகளாலும் பிரசங்கங்களாலும் தமிழ்ப் பாஷையையும் சைவ சமயத்தையும் பெரிதும் வளர்த்துவந்த நாவலர் அவர்கள், ஏட்டுப் பிரதிகளிற் பிழைபட்டுக்கிடந்த பல நூல்களை வழுவறப் பரிசோதித்து அச்சிட்டு உதவியதுபோலவே, தமிழ் நூல்களெல்லாம் பத்திய ரூபமாகக் கிடத்தலின் கத்திய ரூபத்தை வளர்த்தற்கண்ணே ஊக்கம் பெரிதும் கொண்டு செந்தமிழ் வசன நடையைச் சீர்பெற வளர்த்து வந்தார்களாதலால், பத்திய ரூபமாக நூல்களை இயற்றுவதில், அவசியமின்மை பற்றித், தங் கருத்தைச் செலுத்தினார்களல்லர். ஆதலாற்றான் நாவலர் அவர்கள் ஏதும் பாக்கள் இயற்றவில்லையா? எனப்பலர் அவாவோடு வினாவுவதை நாம் பலமுறை கேட்டுள்ளோம்.

இதுபற்றியே நாவலர் அவர்கள் ஒவ்வோர் அமையத்துக்கூறிய தனிப்பாக்களை இயன்றவரையிற்றேடி ஓர் சிறு புத்தக ரூபமாக அச்சிடும் எமது கருத்தைப் பத்திரிகை வாயிலாக முன் வெளிப்படுத்தினோம். அவ்விளம்பரத்தைக் கண்ணுற்றார் பலர், நாவலர் அவர்கள் சரித்திரத்தை விரிவாக எழுதி அப்பாக்களோடு சேர்த்து வெளிப்படுத்தும்படி எம்மை வேண்டினார்கள். அத்தருணத்து நாவலர் அவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பல பிள்ளை அவர்கள் நாவலர் அவர்களது சாயா படமொன்று தந்து உதவினார்கள். அதற்காக அவரிடத்து நாம் பெரிதும் நன்றியுடையேமாய் இருக்கின்றோம்.

முப்பத்திரண்டு வருடங்களுக்குமுன் ஸ்ரீ கனகரத்தின பிள்ளை என்பவரால் எழுதி வெளிப்படுத்தப்பட்ட நாவலர் அவர்கள் சரித்திரத்தைத்தழுவி, புதிதாகச்சேர்க்கவேண்டிய சில சம்பவங்களையுஞ் சேர்த்து அச்சரித்திரத்தை ஒருவாறு விரித்தெழுதியபின், நாவலர் அவர்களின் சுற்றத்தவருட் சிலர்க்கும், அவர்களோடு பழகிய வேறு சிலர்க்கும் எமது கருத்தைத் தெரிவித்தோம். அவருள் நாவலர் அவர்கள் தமயனார் புத்திரரும் அவர்களுடைய யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகருமாகிய ஸ்ரீமத் ந. த. கைலாச பிள்ளை அவர்கள் தாம் அச்சரித்திரத்தை மிக விரிவாக எழுதி முடித்திருக்கின்றோம் என்றும், அது விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படுமென்றும் தெரிவித்தார்கள். ஸ்ரீமத் அம்பலவாண நாவலர் சுவாமிகள் "நாவலர் விஜயம்" என ஓர் நூலைச்செய்யப்போகிறார் என்பது மறிந்தோம். ஆதலால் அச் சரித்திர விரிவை உலகு

க்கு வெளிப்படுத்தும் உரிமையை அவ் விருவர் பாலும் விடுத்து முன்னுள்ள சரித்திரத்தைச் சுருக்கி அச் சரித்திரச் சுருக்கத்தோடும் நாவலர் அவர்களது சாயா படத்தோடும் அவர்களியற்றியருளிய தனிப்பாக்களை யுஞ் சேர்த்து இந்நூலை வெளிப்படுத்தினேம். கைம்மாறு கருதாது தமிழ் நாட்டுக்குப் பேருபகாரராக விளங்கிய நாவலர் அவர்களைக் குறித்ததாகையால் இச்சிறு நூலைத் தமிழ் நாடு பெரிதும் அங்கீகரிக்குமென எண்ணுகின்றேம்.

செல்வம் நிலையற்ற தென்பதை யுணர்ந்து தமது பிற்காலத்தைப் புண்ணிய க்ஷேத்திரத்தில் வசித் துச் செபதியானுதிகளிற் போக்கி ஆன்மலாபத்தைப் பெறுதலே மிக மேலாகிய பேறென உறுதியாக வுணர்ந்து, மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திய மகா புண்ணிய க்ஷேத்திரமாகிய நகுலேச்சுரத் தைத் தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு, அங்கே சிவ தரிசனமுஞ் சற்சனசங்க உறவுமுடையராய் வாழ் பவரும், நாவலரவர்களிடத்தே அத்தியந்த விசுவாசமுடையவருமாகிய பிரபுசிகாமணி, ஸ்ரீமான் சு. கதிர்வேற் பிள்ளை சிருப்பர் அவர்களுடைய தரும பரிபாலன கிருஷி வர்த்தக வித்தியா விருத்தி ஞாபக சின்னமாக நின்று நிலவுமாறு, இந்நூலைச் சமர்ப்பித்துப் பிரகடனஞ் செய்தாம்.

சி. செல்லையா பிள்ளை.

க-உ, வைகாசி-மீ, ஆனந்த-ஹு.
கொழும்பு.

யாழ்ப்பாணம், நல்லூர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள்

Cave

உ

கணபதிதுணை.

ஆறுமுகநாவலர் அவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

தற்சிறப்புப் பாயிரம்.

சிவம்பழுத்த திருநல்லூர்க் கயிலாச
விநாயகர்தாள் சிந்தித் தேத்திப்,
பவம்பழுத்த அமரர்குறை தீர்த்தாண்ட
குமாரவேள் பாதம் போற்றி,
அவம்பழுத்த மதங்குன்றச் செந்தமிழுஞ்
சிவநெறியும் அடைவே ஓங்கத்,
தவம்பழுத்த ஆறுமுக நாவலனார்
சரிதமிது சாற்றி வாழ்வாம்.

ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணத்து நல்லூரிலே, கார்காத்த வேளாளர் மரபிலே, பாண்டிமழவர் குடியிலே, ஞானப்பிரகாச சுவாமிகள் மரபிலே, சாலிசகம் ௧௭௪௫ சித்திரபானு ௵ மார்கழி ௴ ௫௳ (18 Decr. 1822) புதன்கிழமை இரவு பத்து நாழிகை அளவில்;

"உதையலக்கினத்திற் கைந்தி லுதையன்சேப் புந்திசுங்கன்
றதையுறு மிராகோராறிற் சந்திரனேழிற் சார்மன்
பதைபுகழ் சனியொன்பானிற் பத்தினிற் பொன்பன்னொன்றிற்
சிதைவறு கேதுகூடித் திக" மூச்

சிங்கலக்கினத்திலே, அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்கப் பஞ்சமிதிதியும், வச்சிரயோகமும் பாலவகரணமும் கூடிய சுபதினத்திலே உலகமுவப்பத் தோன்றினர். இவரது தந்தையார் நாமம் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமியம்மையார். ஆறுவது புத்திரராகத்தோன்றிய இப்புலவர்பெருமான் ஐந்தாம் வயதிலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று யாழ்ப்பாணத்திலேயிருந்த சுப்பிரமணிய உபாத்தியாயரிடஞ் சில வருடங் கல்விபயின்று, அப்பால் வேலாயுத முதலியாரென்னும் புலவரையடுத்து, அவர் புத்திரராகிய சம்பந்தப்புலவருடன்கூடிக்கற்றுப் பின்னர், இருபாலையென்னுமூரிலிருந்த வித்துவசிரோமணியாகிய சேனாதிராய முதலியார் அவர்களிடத்தும் சிலகாலம் கல்விபயின்றாராயினும்; நல்லூரில் மாதகல் மனப்புலி முதலியாரின் இரண்டாம் புத்திரராய் அருங்கலை விநோதராய் இலக்கிய இலக்கணக் களஞ்சியமாய் விளங்கிய * சரவணமுத்துப்புலவரே நாவலர் அவர்களுக்கு இலக்கிய இலக்கண ஞான சாத்திரங்களைக் கற்பித்த பேராசிரியராம்.

இப்புலவரிடத்தே கல்வியை உளங்கொள மிகப்பயின்று வடமொழி தென்மொழிகளில் மகா பண்டித்தியமடைந்தனர். பிள்ளைப் பருவத்திற்றானே பிரசங்கவன்மை, வாக்குச்சாமர்த்தியம், நல்லொழுக்கம்

---

* இலங்கை அரசாங்கத்திலே தேசாதிபதி அவர்களது சிரேஷ்ட தமிழ்த் துவிபாஷிகரான உத்தியோகத்திலே அமர்ந்திருப்பவரும், ராஜவாசல்முதலியார் (Governor's Gate Mudaliyar) என்னும் கௌரவ பட்டாபிதானம்பெற்றவரும் சமஸ்கிருதம் தமிழ் ஆங்கிளம் என்னும் பாஷைகளில் வல்லவரும், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கப் புலவர்களுள் வெள்ளியங் திருமலை கிழார் என்பார் ஒருவருமாகிய ஸ்ரீ ராஜஸ்ரீ திருச்சிற்றம்பல கைலாசபிள்ளை அவர்கள், இப்புலவரது தௌகித்திரர்.

சிவபக்தி, சிவனடியார் பக்தி முதலியன அவரிடத்தே உடன்பிறந்து வளர்வனபோற் காணப்பட்டன. இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய கலாசாகரங்களையுண்ட பரசமயகோளரி யாகிய இவர், சைவ சித்தாந்த சமயத்தைப் பரிபாலிக்கவும், அச்சமய நூல்களைப் பிரசுரிக்கவும், அவைகளைப்போதிப்பித்தற்கு வித்தியாசாலைகளைத் தாபிக்கவும், சித்தாந்த வுண்மைகளைப் பிரசங்கிக்கவும், புறமதவிருள்களை யோட்டவுமே யெண்ணினர். அவ்வெண்ணத்தைத் தமது சீவியகால வெல்லைவரைக்கும் கொண்டுநடத்தித் தமிழ் நாட்டிலே தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் தளரவிடாது இன்னும் வளர்த்தற்பொருட்டே, இருபதாம் பிராயத்தில் தமக்கு வாய்த்த உத்தியோகத்தையும் பரித்தியாகஞ்செய்து, அங்ஙனம் செய்தமையைக்கேள்வியுற்ற அவரது சகோதரர்கள் அவர்மேற் கோபங்கொண்டு "நீ என்ன புத்தியீனஞ் செய்து கொண்டாய்; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்; இனிமேல் உனக்கு உலகத்தில் என்ன மதிப்பு" என்று அவரைக் கண்டித்தபொழுது அதற்குத்தரமாக, அவர் "நான் உங்களிடம் வந்து பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்கக் கண்டுகொள்ளுங்கள்" என்று சொல்லி அவர்கள் தொடர்பைவிட்டு நீங்கினரென்பது அவர் வெளிப்படுத்திய விஞ்ஞாபனத்தினாலும், இனிது அறியத்தக்கது. அவ்விஞ்ஞாபனத்தின் ஓர் பாகம் வருமாறு :—

"நான் ஜய ௵ முதலாக பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஸ் வித்தியாசாலையிலே இங்கிலீஸ் கற்றேன். பிலபவ ௵ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களா யிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான பெறவில்லை. இங்ஙனமாகவும் மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக ௵ புரட்டாதி ௴ பரித்தியாகஞ்செய்தேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம தருவேன். தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் சொல்லியவழியும் நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீசிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும் என்னோடு இங்கிலீஸ் கற்றவர்களுள்ளும எனக்குப்பின் இங்கிலீஸ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம பெற்று வாழ்ந்திருக்கக்கண்டும், நானும என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சிசெய்யின் அது தப்பாது சித்திக்குமென்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித்துணை மாத்திரங்கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலியவாய்த்தபொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ்செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமேயாகவும், நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்.

"இப்பேராசையினால் இருபது வருஷகாலம் (விபவ ௵ சடு வயது) நான் செய்த முயற்சிகள் பல. அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையர்களாகித் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்வார்களாயின் நான் எடுத்த முயற்சிகள் எல்லாம் இதற்குமுன்னரே நிறைவேறிவிடும். நிறைவேறின் என்னைப்போலவே, பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள். செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

"தன் இம்மைப்பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷகாலம் சுவசமய விருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்திபெறாது. நம்முடைய சைவ சமயிகள் தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவிசெய்யாமை மாத்திரையின் அமையாது பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங்கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செயப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும், தமிழ்க்கல்வியையும் சைவ சமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கம் கிளராவண்ணம் தடை விளைகின்றதே என்னுங்கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வ காலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப் படுகின்றன. பரசமயிகளோ எனக்கிடையூறு செய்யவுமில்லை. என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னை ஆச்சரியம்!!! சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும், தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங்காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே மதிக்கப்படல் வேண்டுமென்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத்திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம்."

ஊர்தோறும் வித்தியாசாலை தாபித்துப் பிள்ளைகளுக்குக் கருவிநூல்களையும் சமயநூல்களையும் கற்பித்தலும், கற்றவர்களும் கல்லாதவர்களுமாகிய எல்லாருக்கும் பயன்படும் பொருட்டுச் சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவசமயத்தைப் பிரசங்கித்தலும் உத்தமோத்தம புண்ணியங்களென்று கூறும் சுருதி வாக்கைச் சிரமேற்கொண்ட நாவலர், விசுவாவசு ௵ தை ௴ (1845) தொடக்கம் காலையிலும் இராத்திரியிலும் சில பிள்ளைகளைச்சேர்த்து வேதனம் பெறாது கல்வி கற்பிக்கத் தொடங்கினர். சைவாகமங்களிலே விதிக்கப்பட்டபடி பிரசங்க மண்டபங்களாவது பிரசாரகர்களாவது காணப்படாமையால் சைவசமயிகளுட் பலர் அச்சமய வுண்மைகளை அறியாதிருக்கின்றன ரெனக்கண்டு, மகைஸ்வரிய மகௌதாரிய மகாப்பிரபுவாகிய வைத்தியலிங்கச் செட்டியாரால் கட்டுவிக்கப்பட்ட வண்ணை வைத்தீஸ்பரன் கோவில் வசந்த மண்டபத்திலே பிலவங்க ௵ மார்கழி ௴ ௰௮ ௳ (31 Decr. 1847) சுக்கிரவாரம் முதலாகச் சுக்கிரவாரந்தோறும் சைவப் பிரசங்கம் செய்து வந்தார். இப்பிரசங்கங்களால் எம் நாடு மிகப்பெரும் நன்மைகளை அடைந்தது. பரங்கிக்காரரோடு மங்கிவந்த சைவப்பயிர் தழைத்தோங்கத் தொடங்கியது. சக௵ ௲௭௱௭௰, கீலக௵ ஆவணி௴ ௫ ௳ சுக்கிரவாரத்தில் (Augt. 1848) வண்ணார்பண்ணையிலே "சைவப்பிரகாச வித்தியாசாலை" என்னும் செந்தமிழ்க் கழகமொன்றைத் தாபிததார்.

தமது வித்தியாசாலையிலே கல்விகற்கும் பிள்ளைகளுக்குக் கருவிநூல் சமய நூலுணர்ச்சிகளை ஊட்டத்தக்க புத்தகங்கள் இல்லாதிருந்தமையானும், இருந்த புத்தகங்கள் சிலவும் எழுத்துப்பிழை, சொற்பிழை வசனப் பிழைகளே பொதிந்தனவாய்க் காணப்பட்டமையானும் அச்சிலும் ஏட்டுப்பிரதிகளிலும் உள்ளவைகளைத் தாம் பரிசோதித்தலும் புதிதாகச் சில நூல்களைச் செய்தலுமாகிய இரண்டினாலும் அப்பிள்ளைகளுக்குப் பயன் பெரிது சித்திக்கப் பண்ணலாமென்றும், அவைகளை அச்சிடுதற்கு ஓர் அச்சியந்திரம் அவசியம் வேண்டுமென்றும் நினைந்து, சௌமிய ௵ ஆடி ௴. (July 1849) சென்னை நகருக்குச் செல்லப் புறப்பட்டு வேதாரணியத்தை அடைந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு திருவாவடுதுறைக்குச் சென்றார். அவரது இலக்கண இலக்கியத்திறமை, சைவசித்தாந்த நூலுணர்ச்சி, நல்லொழுக்கம், சைவசமய விருத்தியின் பொருட்டு இடையறாது சிரத்தையோடுசெய்யும் நன் முயற்சிகள் முதலியவைகளை முன்னரே கேள்விப்பட்டிருந்த அங்குள்ள பண்டார சந்நிதிகளும் தமிழ் வித்துவான்களும் அவரை உபசரித்து, அவரிடத்தே இலக்கண இலக்கியங்களிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் பல ஆட்சேபனைகளைப்பண்ண, அவ்வாட்சேபனைகளுக்கெல்லாம் அவர் சொல்லிய விடைகள், பல நூல்களின் சாரமாயும் யுத்தி அனுபவங்களுக்கு முழுதும் இயைந்தனவாயுமிருந்தமை கண்டு மகிழ்ந்தார்கள்.

தமிழ் நாட்டின்கண்ணே இப்பொழுதிருக்கும் வித்துவான்களுக்கும் முன்னிருந்த வித்துவான்களுக்கும் சாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் தமிழ் சுரந்தருளும் மூலஸ்தானமாயும், தான் தோன்றியகாலம் முதல் இக்காலம் வரையும் தன் ஆதீனத்திலே கல்வி இடையறாது விருத்தியாகிக் கொண்டேவருதலைப் பிரசித்த மாகவுடையதுமாய்ப் பெருஞ் சிறப்புவாய்ந்த அத்திருவாவடு துறையாதீனத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சற்குருநாத சுவாமிகள் ஒருநாள் அவரைச்சைவப்பிரசங்கஞ் செய்யும்படி பணித்தருளினார்கள். அவ்வாஞ்ஞையைச் சிரமேற்றாங்கி அவர் அன்று செய்த பிரசங்கம் கேட்குந்தோறுங் கேட்குந்தோறுந் தெவிட்டாததா யிருந்தமையால் பண்டாரசந்நிதிகள் அவரது வாக்குவல்லபத்தைக் குறித்து மிக மகிழ்ந்து "நாவலர்" என்னும் திவ்விய சிறப்பு நாமத்தைச் சூட்டினார்கள். அன்று தொடக்கம்,

"நிலவுலகி லொருமதிய நிலவியதென் ?றநிகழ்த்தப்
பலகலையு நிரம்பியாழ்ப் பாணமெனும் பாற்கடலி
லிலகியெழீஇ நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினுங்
குலவுதமை யேகுறிக்கக் கொண்டபெருங் குலப்புகழார்"

எனச் சேற்றூர் சமஸ்தான வித்துவான் ஸ்ரீ அருணசலக் கவிராயர் அவர்கள் சொன்னபடி, நாவலர் என்னும் சிறப்புப் பெயர் நல்லூர் - ஆறுமுகநாவலரையே குறிக்கும் உரிமைப் பெயராய் இதுகாறும் வழங்கப்பட்டு வருகின்றது. அங்கே சிலகாலம தங்கியிருந்து பின் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தேவாரம் பெற்ற பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து, சென்னைபுரியை அடைந்து, ஓர் அச்சியந்திரத்தை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினர்.*

---

* யாழ்ப்பாண வட்டுக்கோட்டையிலே அமரிக்கன் மிஷனால் தாபிக்கப்பட்ட "செமினறி" என்னும் கலாசாலையில் கற்றுத்தேறிய கல்வித்திறமை கொண்டே 1857-ம் ௵ சென்னைச் சர்வகலாசாலையார் முதன் முதல் நடத்திய பி. ஏ. பரீட்சையில் சித்திபெற்றவர் தாமிருவர் மாத்திரமே யென விளங்கிய ராய்பகதூர் ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளை ஸ்ரீ C. விசுவநாத பிள்ளை என்னும் இருவரைப்போலவே, "தமிழென் மாதுதன்னொளிபரப்பி, உறைதரும் பான்மையா லுலகெலாம பெயர்பெறும் - முத்தமிழ்க்கவி சொல்லுத்தமக் கவிகள" செறிந்துள்ள யாழ்ப்பாணத்திலே நல்லாசிரியர்களிடம் கற்ற இலக்கண இலக்கிய ஞான சாத்திர அறிவுகொண்டே திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்களால் 1849-ம் ௵ல் நாவலர் என்னும் சிறந்த வித்தியாபிதானம் பெற்றதில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் முதன்மை பெற்றனர்.

வண்ணபுரமெனச் சொல்லப்படும் அராலியிலுள்ள சிவன் கோயிலில் நள ௵ சித்திரை ௴. ௫௨ (April 1856) நடைபெற்ற விக்கினேசுவரப் பிரதிட்டைக்கு அக்கோவில் ஆதீனஸ்தரும் பிரதிஷ்டாசிரியரும் அருச்சகருள் ஒருவருமாகிய ப்ரம்ம ஸ்ரீ ச. செல்லையாக்குருக்கள் எனவழங்கிய கங்காதரக்குருக்கள் அவர்களாலழைக்கப்பட்டு நாவலர் அங்கே சென்றார். கோவிலை யடைந்தபோது வழக்கம் போற்றிட்டஞ் செய்து வைக்கப்பட்ட பட்டுவஸ்திரம் பழம் தாம்பூலமாதி நிவேதனப் பொருள்களை வேலைக்காரன் உடன் கொண்டு செல்ல மறந்து போயினமை தெரிந்து, அவற்றை அக்கிராமத்திற் றேடுதற்கேனும் அல்லது ஏழுமைல் தூரத்துள்ள தமது கிருகத்திலிருந்து தருவிக்கவேனும் கூடாமையால் "சீரேறுகருணையுருவாய" என்றற் றொடக்கத்து மூன்று விருத்தங்களையும (தனிப்பாமாலை காண்க) முறையே சித்திவிநாயகர், விசுவநாதசுவாமி, விசாலாட்சி அம்மையாகிய மூவர் பேரிலும் பாடிச் சூட்டி வணங்கினார். புத்திரப் பேற்றைப் பெரிதும் விரும்பியே சித்திவிநாயகரைப் பிரதிஷ்டை செய்த அவ்வாசாரியாரின் உள்ளக்கருத்தை அறியாமலே "நினதிரண்டு கழல்பணிந்திடின் மகப்பேறு முதலியாவையும் கைகூடலரிதாகுமோ" எனத் தோத்திரத்தில் அமைத்தவாறே அவ்வாசிரியருக்கு ஆண் மகவு கிடைத்ததென்று, இவ்வரலாற்றையும் அம்மூன்று பாக்களையும் எமது சிறுவயதில் அவ்வாசாரியர் சொல்லக் கேட்டறிந்தோம்.

கிறிஸ்தவர்கள் சைவசமயத்துக்கு விரோதமாகச் செய்துவரும் பல இடையூறுகளையும் தூஷணங்களையும் நிராகரித்து, சுன்னாகத்திலே வசித்த ஸ்ரீ முத்துக்குமார கவிராயர் இயற்றிய "ஞானக்கும்மி" என்னும் நூலைப் பரிசோதித்தும், "சுப்பிரபோதம்", "சைவதூஷணபரிகாரம்" என்னும நூல்களைத் தாமியற்றியும் வெளிப்படுத்தினார். பிந்தியதற்குச் "சுப்பிரதீபம்" எனப் பெயர் கொடுத்துப் பொருந்தா நியாயங்களைக்காட்டி ஓர் கண்டனம் ஸ்ரீ கறல் விசுவநாத பிள்ளை என்னும் சுதேசக் கிறிஸ்தவரால் வெளிப்படுத்தப்பட்டது. இக் கிறிஸ்தவரைக குறித்துச் சில வருடங்களுக்கு முன் சென்னை புரியில் நடைபெற்றுவந்த "ஸ்ரீலோகரஞ்சனி" உ-ம் புத்தகம் ககூம் இலக்கப் பத்திரிகையில் தோற்றிய கடிதத்தினோர் பகுதியை இங்குத் தருகின்றேம்.

["ஸ்ரீ-ல-ஸ்ரீ சற்குருநாத சுவாமிகளாகிய நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் எழுதி வெளிப்படுத்தப்பட்ட "சைவதூஷண பரிகார"த்தைக் கண்டித்து, சுதுமலை ம.ற.ற. கறல் விசுவநாத பிள்ளை பி. எ. பி. எல். என்பவரால் "சைவதூஷன பரிகார நிராகரணமாகிய சுப்பிர தீபம்" எனப்பெயரிய ஓர் நூல் வெளிப்படுத்தப்பட்டது. இதைக் கிறிஸ்தவர் புகழ்ந்து பாராட்டி ஆங்காங்குள்ள தத்தம் ஆலயங்களிலும் வித்தியாசாலைகளிலும் காலத்துக்குக் காலம் பலருக்கும் இலவசமாகக் கொடுத்து வந்தார்கள். இந்நூலாசிரியராகும் மேற்படி பிள்ளை அவர்கள் சிதம்பரத்திலே பலசன சமுகத்திலே மேற்படி சற்குருநாத சுவாமிகளோடு சமயவாதஞ்செய்ய நேரிட்டவிடத்து, அவ்வாதத்திலே தோற்று, உடனே எழுந்து அஞ்சலியஸ்தராக நின்று "சற்குரு" எனத்துதித்துப் பிராயச்சித்தஞ் செய்யப்பெற்றுச் சைவசமயத்தை அநுட்டித்து வந்தனரென்பது யாவருமறிந்த சத்தியம். தாம் எழுதிய சுப்பிர தீபத்திற்குத் தாமே மறுப்பெழுதியும் அதனை வெளிப்படுத்து முன்னரே தேகவியோகமெய்தினர். அம்மறுப்பாகிய கயிலிகிதப் பிரதியை அவருடைய கிறிஸ்தவ உறவினர் சிலர் கையாடி எரித்துவிட்டனர்."]

நாவலரிடத்தே கல்விகற்றுத்தேறிய மாணாக்கருள் அநேகர் சிவாநுக்கிரகத்தினாலே யாழ்ப்பாணத்தினும் மற்றையூர்களினும் ஆசாரியத்துவம், வர்த்தகம, சேவனம் முதலிய தொழில்களினாலே பொருள் சம்பாதித்துக்கொண்டு வாழ்வாராயினர். அம் மாணாக்கருள் ஒருவராய் யாத்திரையின் பொருட்டுச் சென்ற ஆறுமுகப்பிள்ளை திருவண்ணாமலை ஆதீனத்திற்குப்போய்க் காஷயம் பெற்றுக்கொண்டார். பின் ஆறுமுகத் தம்பிரான் என வழங்கப்பட்டுவநத இவர், அவ்வாதீனத்து வித்வ ஜனர்களுளொருவராய், சேக்கிழார் நாயனாராற் செய்தருளப்பெற்ற திருத்தொண்டர் பெரிய புராணமென்னும் பன்னிரண்டாந் திருமுறைக்கும், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி என்பவற்றிற்கும் விசேடவுரை செய்தனர். சைவசித்தாந்த உணர்ச்சியில் வல்ல இவர் சில வருடங்களுக்குமுன் சிவபதமடைந்தனர்.

காலயுத்தி ௵ ஆனி மாசத்தில் (June 1858) பின்னும் சென்னைக்குச் செல்லப்புறப்பட்டு திருவாவடுதுறை சீர்காழி சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு சென்னைபுரியை அடைந்தார்.

அக்காலத்துத் தமிழ்நாட்டுப் பிரபுக்களுள்ளே தமிழ்ப்புலமையும் தமிழ்ப்புலவர்களுக் குபகரிக்கும் ஔதாரியமும் ஒருங்குடைய மகாப்பிரபுவாகிய ம.ற.ற.ஸ்ரீ ராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவர், நாவலருடைய கல்வித்திறமையை அறிந்து தமிழிலே மிகச்சிறந்த இலக்கியங்களாகிய திருவள்ளுவர் பரிமேலழகர் உரையையும் திருக்கோவையார் † நச்சினார்க்கினிய ருரையையும், தருக்க சங்கிரகம் அன்னம்பட்டியத்தையும் பரிசோதித்து அச்சிடும்படிக்கும் அதனால் நேரும் செலவைத்தாமே கொடுப்பதாகவும் வேண்டிக்கொண்டபடி, அவைகளையும் வேறு சில நூல்களையும் அச்சிடுவித்து வெளிப்படுத்தினார்.

---

† திருக்கோவையாருக்கு அகப்பொருட் பகுதியாகவைத்து உரை செய்தவர் நச்சினார்க்கினியர் எனக் கைக்கொள்ளப்பட்டு வந்தது. நெடுங்காலஞ் சென்றபின் அவ்வுரை பேராசிரியரது எனச்சொல்வாருமுளர்.

சைவசமய நூலுணர்ச்சியிலும் தமிழ்க்கல்வியிலும் நாவலர் மிகச்சிறந்தவரென்று எங்கும் புகழ் படைத்து வரும்போது, திருமயிலாப்பூரிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்துச் சின்னப்பட்டமாகிய ஆறுமுக தேசிகர், நாவலரைத் தாம் காணல் வேண்டுமெனு மாசை மிகுதியினாலே அவரிடத்திற்குச் சில ஓதுவார்களை அனுப்பித் தம்முடைய திருமடத்திற்கு அழைப்பித்து அவருடைய இலக்கண இலக்கியத் திறமையையுஞ் சித்தாந்த நூலுணர்ச்சியையுங் கண்டு, தாம் தரித்திருந்த உருத்திர சஞ்சியத்தை ஞாபகப்பொருட்டாக விருக்கட்டுமென்று அவரது மேனியிலே தமது அருமைத்திருக்கரங்களாற் சாத்தியருளினார். பின் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுச் சிதம்பர தரிசனஞ் செய்துகொண்டு திருவாவடுதுறையை அடைந்தனர். அந்நாட்களில் உபயசந்நிதானங்களும் அவரிடத்திலே சித்தாந்த நூல் இலக்கிய இலக்கண நூல்களை ஆராய்ச்சி செய்வாராயினர். அவரை அம்மடத்திற்றானே இருக்கும்படி அவர்கள் பலவாறு கேட்டும், அக்கேள்விக்கிசைந்து அம்மடத்தையே தமக் குறைவிடமாக்கிக்கொண்டால் தாம் பற்பல விடங்களிலுஞ்சென்று வித்தியாசாலைகள் தாபித்தலும் சைவப்பிரசங்கங்கள் செய்தலும் சுயாதீனமாக இருத்தலுமாகிய இவைகள் எல்லாவற்றிற்கும் தடையாயிருக்குமென் றெண்ணி, அதற்குடன்படாது மறுத்துவிட்டு, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு வழியிலுள்ள பல தலங்களை வணங்கிக்கொண்டு துன்மதி ௵ பங்குனி ௴ (1861 March) யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினார்.

அடுத்த ருதிரோற்காரி ௵ மார்கழி மாசத்தில் (1863 Decr.) பின்னுஞ் சென்னபட்டணம் போகப்புறப்பட்டு, அர்த்தோதய புண்ணிய காலஞ்சமீபித்து வந்ததினாலே இராமேசுரத்துக்குச் சென்று சேதுஸ்நானமுஞ் சுவாமி தரிசனமுஞ் செய்துகொண்டு இராமநாத புரத்துக்குப்போய் அங்கே திருவாவடுதுறை மடத்திலிருந்த விசுவலிங்கத் தம்பிரானுடைய வேண்டுகோளின்படி அம்மடத்திலிருந்தார். இதற்குச் சில வருடங்களுக்குமுன்னே சென்னபட்டணத்துக்குப் பொன்னுச்சாமித் தேவர் போயிருந்தபொழுது இருவருக்கும் ஒரு விஷயத்தைக்குறித்து மனவருத்த முண்டாயது. அதனால் நாவலர் தேவரைக்காண விரும்பவில்லை. நாவலர் வந்திருக்கின்றாரென்பதைக் கேள்வியுற்ற பொன்னுச்சாமித் தேவர், தமது வித்துவானொருவரை அழைத்து, நாவலர் அவர்கள் நம்முடைய தேசத்திலே வந்திருந்தும் நம்மைக் காணவில்லையே. எந்த வித்துவானும் இத்தேசத்துக்கு வந்தால் நம்மைக் காணாமல் இருக்கிறதில்லையே. ஆதலால் அவர்களை எப்படியாவது நமது சமஸ்தானத்துக்கு அழைத்து வருகவென அனுப்பினார். அவ்வித்துவான் அவரிடம் அடிக்கடி சென்று "தேவரைக் காணவில்லையா? தேவரைக் காணுதற்குத் தங்களுக் கிட்டமில்லையாயினும் இத்தேசத்துக்குத் தாங்கள் வந்திருக்கிறபடியால் அவரைக் கண்டு போதலே தகுதி" என்று பலவாறு சொல்லியும் அவற்றைக்கேட்ட நாவலர், "ஒருவரைக் காணவிருப்பமில்லாத என்னைக் காணும்படி சொல்லுதல் உமக்குப் புத்தியன்று; இன்னும் பிரியமில்லாத ஒன்றைச்செய்தல் எனக்கு வழக்கமுமன்று" எனத்தெரிவிக்க அவ்வித்துவான் தேவரவர்களது அதிகாரங்களைக் குறித்துப் பயனற்ற வார்த்தைகளைக்கூற, நாவலர் நகைத்து, தேவருடைய அதிகாரம் செலவாக்கு முதலியவைகளை எனக்குச் சொல்லுதலினால் நான் அவைகளுக்குப் பயந்து அவரைக் காணுதற் குடன்படுவேனென்று நினைந்து இவர் எனக்குச் சொல்லுகின்றார். இவருடைய சொற்களுக்குப் பயந்து தேவரைக் காணுதற் குடன்படுவேனாயின், நான் எடுத்துக்கொண்ட நன் முயற்சிகளையும் இன்னோரன்னோர்க்கஞ்சிக் கைநெகிழவிட நேரிடுமெனத் தம்முளுணர்ந்து, பொன்னுச்சாமித் தேவருடைய குறைகளையும், அவராலும் அவரைச் சார்ந்தோர்களாலும் அத்தேசத்தார் படுமிடர்களையும் வெளிதிறந்து அவ்வித்துவான் முன்னிலையிற் பேசிக் கண்டித்து அவரை அனுப்பிவிட்டார். அவ்வித்துவான் தெரிவித்த வரலாறுகளைக் கேள்வியுற்ற தேவர், நாவலர் அவர்களைப் பகைத்தால் அதனால் பல தீங்குகள் தமக்கும் தமது தேசத்துக்கும் நேரிடுமென்றும், தற்காலத்து வித்துவான்களுள்ளே அவர் சிறந்த வித்துவானும் பிரபுவுமாயிருக்கின்றாரென்றும், தமிழ் நாட்டிலுள்ள மற்றை வித்துவான்களைப்போல அவர் தம்மிடத்திலே சம்மானம் பெறுதற்கும் தம்மால் மதிக்கப்படுதற்கும் விருப்புடையவரன் றென்று மறிந்து, "பசுக்கன்று தாயை விட்டுப் பிரிந்தாலும் தாயானது தனது கன்று நிற்குமிடந்தேடி அதைச் சென்றணைந்து, அதற்கு மிக்க அன்போடும் பாலைச் சுரந்து கொடுத்தல் போல, தாங்களும் நாமறியாது தங்களுக்குச் செய்திருக்கும் குற்றங்களைப் பொறுத்து இது கண்டவுடன் எழுந்தருளி வரல்வேண்டும்" என்னும் பொருளை உள்ளடக்கிய ஒரு கவியைப்பாடி அவ்வித்துவானிடத்திற் கொடுத்து அனுப்பிவைத்தார். அவ்வித்துவான் மிகப்பணிவோடு அச்சீட்டுக்கவியை நாவலர் அவர்களிடம் கொடுப்ப, அவரதை வாசித்தபின்பு, ஒருவர் பலவாறு வலிந்து அழைக்க நாம் போகாதிருத்தல் சிறப்பன்று என நினைந்து, அங்கவஸ்திரந் தரித்துக் கொண்டும் பாத குறடிட்டுக் கொண்டும் தம்மோடு கூடப்போகு மெல்லாரோடும் அரண்மனையிற் சேறல்; தேவரிடத்திலே பரிசு பெறாது விடுதல்; தேவர் எழும் பொழுதெல்லாமெழாதிருத்தல் என்னுஞ் சில கட்டுப் பாடுகளைச் செய்து கொண்டு தமது பரிசனங்களோடு அரண்மனைக்குச் சென்றார். நாவலர் அவர்கள் வருவார்களென்று எதிர் பார்த்திருந்த தேவர், அவரைக் கண்டவுடனே எதிர் கொண்டழைத்து, ஆசனத்திருத்தி அவரோடு கல்வி விஷயங்கள் பலவற்றைப் பேசிய பின்பு பிரசங்கிக்குமாறு வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிசைந்து "சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளை" என்னுந் தாயுமான சுவாமி பாடற் செய்யுளையே பீடிகையாக எடுத்துக்கொண்டு சிவனொருவரே பிறப்பிறப்பில்லாத கடவுளென்பதைப்பலவைஷ்

ணவ சாஸ்திரிகள் முன்னிலையிற் பிரசங்கித்தார். தேவர் அப்பிரசங்கத்தைக் கேட்டு மிகப்புகழ்ந்து ஒரு காலத்தும் ஒரு வித்துவானும் பெறாதனவும் ஒரு வித்துவானுக்கும் கொடாதனவுமாகிய இரண்டு விசேடசாதுராவை அழைப்பித்து அவைகளை ஏற்றுக்கொள்ளுமாறு பலவாறாக வேண்டிக் கொண்டார். இது முன்னே தாஞ் செய்து கொண்ட கட்டுப்பாட்டுக்கு விரோதமான தென்று மறுத்தும், தேவருடைய ஆராமையையும் அன்பையுங் கண்டு ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தபின்பு, தேவர் அவைகளைத் தமது கைகளாலெடுத்து அவருடைய மேனியிற் சாத்திவிட்டார். அதன் பின்பு தேவர், ஏட்டுப் பிரதிகளிலுள்ள கடினமான நூல்களைத் தாங்கள் பரிசோதித்து உலகத்திற்குப் பயன் படும் பொருட்டு அச்சிட்டு வெளிப்படுத்தல் வேண்டுமென்றும் அதற்குத் தம்மாலாய உதவிகளைக் காலந்தோறும் செய்வதாகவும் வாக்குக் கொடுத்தார். பின்பு அவரும் அவரோடு கூடச் சென்றவர்களும் அரண்மனையை விட்டு நீங்கி மடத்துக்குப் போனார்கள். மற்றைநாள் திருவுத்தரகோச மங்கைக்குப்போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு மதுரைக்குப் போயினார்.

அங்கே திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்துப் பண்டார சந்நிதிகளும் மற்றைச் சைவப் பிரபுக்களும் கேட்டுக் கொண்டபடி மீனாக்ஷி அம்மை சந்நிதானத்திலே அத்தலத்தின் பெருமையையும், அதிலெழுந்தருளியிருக்கும் சொக்கலிங்க மூர்த்தியுடைய பெருமையையும் சைவ சித்தாந்தத்தினுயர்வையும் விரித்துச் சனங்களுக்கு இனிது விளங்கும்படி பிரசங்கித்தார். உடனே கோவிலருச்சகர் அம்மைக்குச் சாத்திய விபூதிப் பிரசாதமும் பரிவட்டமும் புட்பமாலையுங் கொண்டுவந்து விபூதிப் பிரசாதத்தைச் சைவப் பிரசாரகருடைய கையிற் கொடுத்து, பரிவட்டத்தைச் சிரசிலேகட்டி, மாலையைத்தோளிலிட்டு ஆசீர்வதித்தார். பின் கோயிலினின்று வாத்திய முதலிய வரிசைகளோடு மடத்துக்கு அனுப்பப்பட்டார். சிலநாட் சென்றபின் மடத்திலே ஒரு பிரசங்கஞ் செய்தனர். பிரசங்க முடிவிலே மகா சந்நிதானம் சந்தோஷங் கொண்டு தமது திருச் செவிகளிலணிந்திருந்த சுந்தர வேடங்களைக் கழற்றி நாவலருடைய செவிகளிலணிய, அது கண்ட சின்னச் சந்நிதானம் தாம் அணிந்திருந்த ஆறு கட்டிகளைக் கழற்றி அவ்வாறு செய்து உபய சந்நிதானங்களும் பிரசங்கத்தை இனிது பாராட்டி வரிசையோடு அனுப்பிவிட்டார்கள். அதன் பின் சின்னச் சந்நிதானம் இலக்கணக் கொத்திலுள்ள சந்தேகங்களைக் கேட்டு நிவிர்த்தி பண்ணிக் கொண்டார்.

சிலநாட் சென்று பலதலங்களையும் வணங்கிக் கொண்டு குன்றக் குடிக்குச் சென்றார். அங்குள்ள திருவண்ணாமலை ஆதீனத்துத் திருமடத்திலே தங்கியிருக்கும் காலத்தில் அவருடைய காலம் சித்தாந்த விஷயத்திலே பண்டார சந்நிதிகள் செய்யும் ஆட்சேபங்களுக்குச் சமாதானஞ் சொல்லுதலிற் போக்கபட்டது. ஒரு நாள் அப்பண்டார சந்நிதிகளின் கேள்விப்படி அத்திருமடத்திலே சைவ சித்தாந்தத்தின் உயர்வைக் குறித்து ஓர் பிரசங்கஞ் செய்தார். பண்டார சந்நிதிகள், சாஸ்திரிகள் தம்பிரான்கள், சைவப் பிரபுக்கள் ஓதுவார்கள் முதலாயினோர் அப்பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். வேறு மடத்துப் பண்டார சந்நிதிகள் தாமும் அத்திருமடத்து விதிவழியே பல்லக் கேறிச் சென்றால் தமது கட்டுப்பாடு அழிந்து போமென்று அதற் கிடங்கொடாத பண்டார சந்நிதிகள், பிரசங்க முடிவிலே பல்லக்கொன்று திட்டப்படுத்திச் சித்தாந்த சைவப் பிரவர்த்தகராகிய நாவலரை அதின் மேலேற்றித் தம்பிரான்கள் சாஸ்திரிகள் ஓதுவார்கள் முதலானவர்கள் சூழ்ந்து செல்லக் கட்டியத்தடி, வாணத்தடி, கோணத்தடி, வெள்ளிக் கைப்பந்தி முதலிய விருதுகளும் பெரிய மேளம் முதலிய வாத்தியங்களும் முன் செல்லப் பட்டணப்பிரவேசஞ் செய்வித்தார்கள்.

பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் திருப்பெருந்துறைக்குப் போயிருந்த காலத்தில் இராமநாதபுரம் இராமசாமிப் பிள்ளை திருவிளையாடற் புராணத்திலும் வன்றொண்டச் செட்டியார் நன்னூல் விருத்தியுரையிலும் தங்களுக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டார்கள்.

அங்கிருந்து பலதலங்களை வணங்கிக்கொண்டு நாவலர் கும்பகோணத்தை அடைந்தனர். அதைக் கேள்வியுற்ற பண்டார சந்நிதிகள், வித்துவான்களிற் சிறந்தவரெனத் தமிழ்நாடெங்கும் புகழ்படைத்தவரும் தேவாரம் பெற்ற அநேக ஸ்தலங்களுக்குப் புராணஞ் செய்த மகா வித்துவானுமாகிய ஸ்ரீமத். மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களையும், சில ஓதுவார்களையும், அவரை மடத்துக்கு அழைத்துக்கொண்டு வரும்படி அனுப்பி அவரை வரவழைத்து உபசரித்துப் பல பிரசங்கங்களைச் செய்வித்தும் சித்தாந்த நூல்களிலும், இலக்கண இலக்கியங்களிலும் அவர்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்த்தும் வந்தார்கள். சந்தேக நிவிர்த்தி பெற்றவர்களுள் ஒருவரான நமசிவாயத் தம்பிரான் முன் சென்னபட்டணத்தினும் போயிருந்து சிலகாலம் அவரிடத்திலே பாடங்கேட்டவர்.

பின்னர்ச் சிதம்பரத்துக்கு மீண்டு, இரத்தாட்சி ௵ ஆவணி ௴ ௬ ௳ (1864 Augt.) அங்கே மேலை வீதியிலே ஒரு வித்தியாசாலை தாபிக்க ஆரம்பித்து அக்கட்டட வேலையை நிறைவேற்றி ஐப்பசி ௴ ௨௮ ௳ சுக்கிரவாரமும் சுக்கில பக்ஷத் திரயோதசி திதியும் ரேவதி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்திலே "சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை" எனப் பெயர்கொண்ட பள்ளிக்கூடத்தைத் தாபித்தார். திருவா

வடுதுறை, தருமபுரம், திருவண்ணாமலை முதலிய ஆதீனத்துப் பண்டார சந்நிதிகளும், பலவிடங்களிலுள்ள சைவப்பிரபுக்களும் சிதம்பர தரிசனத்தின் பொருட்டு வரும்போதெல்லாம் அவ்வித்தியாசாலைக்குச் சென்று, பிள்ளைகளைப் பரீக்ஷித்து, சமர்த்தர்களாகிய மாணாக்கர்களுக்குப் பரிசு கொடுத்து, அவ்வித்தியாசாலையைத் தாபித்தவரது சமய ஒழுக்கம், கல்வியறிவு, பரோபகாரச்செயல முதலிய சிறந்த குணங்களைப்பற்றி, வித்தியாசாலையிற்றானே பல சனங்களெதிரே பாராட்டி வியந்து பேசிப்போவார்கள்.

பிரபவ ௵ ஆடி ௴ ௨௰௨ (1867 July) நாவலர் சிதம்பரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்னை நகரை அடைந்தார். கருங்குழி இராமலிங்க பிள்ளை என்பவர் தாஞ்செய்த பாடல்களுக்கு அருட்பா வென்றும், தமக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும் பெயரிட்டு, பாடல்களில் ஆங்காங்குத் தாம ஓதாதுணர்ந்தேம் என்றும், செத்தவரை எழுப்புதல், தண்ணீரால் விளக்கிடல், சாக்கிரத்தில் நடேசருடன் பேசுதல், இரசவாதஞ் செய்தல் ஆதிய அற்புதச் செய்கைகளைச் செய்தேமென்றும், செய்வேமென்றும தற்புகழ்ச்சி செய்துலவிய காலத்து, அப்பிள்ளை தமக்கு இட்டுக்கொண்ட எவ்வெப் பெயர்களையாவது, தாம் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தோம், செய்கின்றோம், செய்வோமென்று சொல்வதையாவது, தம்முடைய பாக்கள் மிகச் சிறந்தவை யென்பதையாவது பொறுப்பினும், சிவஞானச் செல்வர்களாகிய சமயாசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாக்களை நிறுத்தித் தமது பாக்களைப் பாராயணம் பண்ணுவித்தலையும், தம்மை அச்செல்வர்களோடு சமத்துவ முடையர் என்பதையும், ஒருவாற்றானும் சகிக்கலாற்றாத நாவலர், அங்ஙனம் அவர் அற்புதச் செய்கைகளைச் செய்யின் பல அறிவினர் சமுகத்திற் செய்து உலகத்தைத் திருத்த வெளிவரலாமே! அவ்வாறின்றிப் பொய்யாயினவற்றை மெய்யெனச் சொல்வதன்றிப் பாட்டுக்களினுஞ் சேர்த்து விடின் சமய குரவர்களுஞ் சந்தான குரவர்களுஞ் செய்த உண்மையான அற்புதங்களும் இங்ஙனமாக உலகத்தவரால் எண்ணப்படுதலால் அதிபாதகஞ் சேருமே என்றும், தேவார திருவாசகம் முதலியனவே அருட்பாவெனவும் திருமுறைகளெனவும் பெயர் பெறுமென்றும், சிவபெருமானே திருவருட் பிரகாச வள்ளலார் என்னும திருநாமத்திற்குத் தகுந்தவர் என்றும் பிரபல நியாயங்கள் காட்டிப் பலசனங்களெதிரே பிரசங்கித்தார். இதனால் வாய்ப் பூட்டிடப்பட்ட இராமலிங்க பிள்ளையும் அவர் சீடர்களும் பொறுமையாற் செய்தனர் என்ப. இராமலிங்க பிள்ளை அவர்கள் போன்ற சைவப்பயிர் தழைக்க இன்சொன் மழை பொழியுஞ் சித்தாந்த மேகங்கள் தோன்றாவோ வென்று சொப்பனத்துந் தம்மனத் தெண்ணுங் கிடக்கை வாய்ந்த நாவலர் இராமலிங்க பிள்ளை அவர்கள் பாடலாற் பொறுமை கொண்டாரென்பது உலக மொப்பாத ஒன்றேயாம்.

இதன் பின்பு பொன்னுச்சாமித் தேவருடைய வேண்டு கோளின்படி சேதுபுராணத்தையும் திருவாவடுதுறை மகாசந்நிதானம் கட்டளை யிட்டருளியபடி இலக்கணவிளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக்கொத்து என்னும் நூல்களையும் பரிசோதித்து வெளிப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்துக்கு அவர் திரும்பவேண்டிய அவசியம் நேர்ந்ததால் சுக்கில ௵ ஆனி ௴, (1869 June) சென்னபட்டணத்தை விட்டகன்று சிதம்பரம், தருமபுரம் முதலிய பலதலங்களை வணங்கிக் கொண்டு மாசி ௴ ௨௭-ந் திகதி யாழ்ப்பாணம் இரேகுத் துறையில் வந்திறங்கினார்.

சைவ சித்தாந்தப் பிரவர்த்தகராகிய நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றாரென்பதை முன்னரே அறிந்து அவர் வரவை எதிர் பார்த்திருந்த சைவசமய பத்திமான்கள் யாவரும் அன்று வீதிகடோறும் பந்தரிட்டு, வாழைகள் நாட்டி, தோரணங்கள் நிரைத்து, பூமாலைகள் தூக்கி, பூரணகும்பங்கள் வைத்துத் தீபங்களேற்றிவைத்து, அவரைப் பூம்பல்லக்கிலி வரச்செய்து பலவாத்தியங்க ளொலிக்க அழைத்துக் கொண்டுவந்து அவரது சைவப் பிரகாச வித்தியாசாலையிலே அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தின் மீது இருத்தினார்கள். அங்கு செறிந்து நின்றயாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளத் தக்கபடி திரிபதார்த்தலக்ஷணங்களை விரித்துப் பிரசங்கித்தார்.

இதற்குப்பின் காலந்தோறும் சைவப் பிரசங்கங்கள் செய்துகொண்டும் தமது வித்தியாசாலையைப் பரிபாலித்துக் கொண்டும் வருங்காலத்திலே, கிறிஸ்த வித்தியாசாலைகளில் இங்கிலீஷ் கற்றற் பொருட்டுச் செல்லும் சைவசமயப் பிள்ளைகளை அவர்கள் தரித்திருக்கும் விபூதியை அழிக்கும்படி பாதிரிகள் நெருக்குவதை அறிந்து பிரமோற்பத்திவருடம் தை ௴ (1872 Jany.) ஓர் சைவ ஆங்கிள வித்தியாசாலையைத் தாபித்தார். அடுத்த வருடத்திலே கோப்பாயிலும் புலோலியிலும் இரண்டு தமிழ் வித்தியாசாலைகளும் அவரால் தாபிக்கப்பட்டன. இவ்வித்தியாசாலைகளை நடத்தற்கு வேண்டிய பொருள் ஒரு சிறிதுமில்லா திருந்தும் ஆங்கிள வித்தியாசாலையில் பிள்ளைகள் கொடுக்கும் வேதனத்தைக் கொண்டும், கவண்மென்டாரிடத்திலே உதவி பெறலாமென்ற நம்பிக்கையைக் கொண்டும் தொடங்கியும், பிள்ளைகள் இறுக்கும் வேதனம் குறைந்ததினாலும், அயலில் வேறு வித்தியாசாலைகள் இருப்பதால் உதவிசெய்ய கவண்மெண்டார் மறுத்து விட்டதினாலும் அவ்வித்தியாசாலைகள் சிலகாலத்தின் பின் நிறுத்தப்பட்டன.

நாவலர் எம்நாட்டுப் பிரசைகளது யோக க்ஷேமத்தை விரும்பிக் காலந்தோறும் பொதுவகையானுஞ் சிறப்பு வகையானுஞ் செய்த செயல்கள் பல ஈசுர வருடத்திலே (1877) மழை குறைந்தமையால் சோழதேசம் பாண்டி தேசங்களிலும் இலங்கையிலும் நெல்விளைவு அற்றுப்போயது. அதனால் யாழ்ப்பாணத்திற் பஞ்சமுண்டாயிற்று. அதனைக் கண்ட நாவலர் தமது கையாற் சிறிது பொருளுதவி, சில புண்ணியவான்களை அருட்டி ஏழைகளுக்கு ஆரம்பத்திற் கஞ்சி வார்ப்பித்தும், பின் அன்னம் கொடுப்பித்தும் வந்தார். இவ்வருஷம் தை மீ இலங்கைத் தேசாதிபதி அவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது, அங்குள்ளார்க்கு அத்தியாவசியகம் வேண்டற்பாலனவாகிய சில விஷயங்களைக் குறித்து ஒரு விண்ணப்பம் பண்ணியிருந்தார்.

முன்னொரு காலத்திலே கீரிமுகமுடையவராகிய நகுல முனிவர் முசுகுந்தச் சக்கிரவர்த்தியினுடனே சென்று ஸ்நானஞ் செய்து கீரிமுகம் மாறப் பெற்றதும மாருதப் பிரவல்லியின் குன்ம நோயோடு குதிரை முகத்தை நீக்கியதுமான புண்ணிய சங்கம தீர்த்தத்தையுடைய கீரிமலையிலே இருந்த புராதன சிவாலயம் போர்த்துக்கேயரால் இடிபட்டது. சிவபுண்ணிய பரிபாலன துரந்தரராகிய நாவலர் அக்கீரிமலையிலே ஒருசிவாலயங் கட்டுவித்தல் வேண்டும் என்னும் பேராசையுடையராய் வெகுதானிய௵ வைகாசி மீ (1878 May) "கீரிமலைச் சிவன்கோயில்" எனப்பெயரிய பத்திரிகையை வெளிப்படுத்தியபின் சோதிடர் சிற்பாசாரிகளுடன் அங்குசென்று அக்கோயில் கட்டுவித்தற்கு வேண்டிய காலமும் இடமும் ஆராய்ச்சி செய்து திரும்பினார்கள். நாவலர் அவர்கள் சிவபதமடைந்தபின், அவர் உள்ளக் குறிப்பின்படியே, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை ஏறக்குறைய ௩௨ வருடங்களுக்கு முன் கட்டுவித்தவரும் வெகு சனங்களாலே நன்கு மதிக்கற்பாடு உடையராயிருந்தவருமாகிய சபாபதி தேசிகர் அவர்கள் மரபிற் பிறந்த சற்குண சம்பன்னராகிய கார்த்திகேயக் குருக்கள் அவர்களும், அவர்கள் புத்திரர்களாகிய சபாபதிக் குருக்கள் தியாகராசக் குருக்கள் என்னும் இருவரும சென்ற விக்ரம ௵ கீரிமலையிலே சிவன் கோயில் கட்டுவிக்கும்படி ஆரம்பித்து, சைவசமயிகள் அன்போடு கொடுக்கும் பொருள் கொண்டும் தம் பொருள் கொண்டும திருப்பணி முடித்துப் பிரதிஷ்டை செய்தார்கள். நாம் இந்நூலை அர்ப்பணஞ் செய்தற்கு உரியராக விளங்கும் பிரபு சிகாமணியும், ஐம்பது வருடங்களுக்கு மேல் கொழும்பிலே "ஒறியண்டல் வங்கி"ச் சிறுப்பு உத்தியோகத்தைக் கௌரவம் பெற நடாத்தித தமது சேட சீவிய காலத்தை இத்திவ்விய க்ஷேத்திரத்திலே வசித்துச் செபதியானாதிகளிற் கழிக்க எண்ணி அங்கே ஓர் மடாலயத்தை அமைத்து ஏழைகளுக்கு இயன்ற தருமஞ் செய்து வாழும் ஸ்ரீமான் சு. கதிரைவேற் பிள்ளை அவர்களும், அவருடைய புதத்திரர்களும் சமாதான நீதிபதிகளுமாகிய ஸ்ரீ. ஞானசேகரம் பிள்ளை, ஸ்ரீ. நமசிவாய பிள்ளை ஆகிய இருவர்களும் இவ்வாலயத் திருப்பணிகளுக்கும் நித்தி நைமித்திகப் பூசை முதலியவைகளுக்கும பேருபகாரிகளாக விளங்குகின்றார்கள்.

முற் கூறிய வெகுதானிய ௵. திருஞான சம்பந்த சுவாமிகள் சிவசாயுச்சிய மடைந்த திரு நக்ஷத்திரமாகிய வைகாசி மூல நக்ஷத்திரத்திலே நாற்றிசைக் கண்ணுமிருந்து சென்று குழுமிய வெகுசன சமுகத்திலே செய்த பிரசங்க முடிவில் "நான் உங்களிடத்திலே கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது நம் சமயத்தவர்களோடும புறச் சமயத்தவர்களோடும் பெரும் பகையையெடுத்து முப்பத்திரண்டு வருஷகாலமாக உங்களுக்குச் சைவ சமயத்துண்மையைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவ சமயம் குன்றிப் போமென்று பாதிரி மார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயததைப் போதிக்க என்னைப்போலே ஒருவரும வரார். இதுவே உங்களுக்கு யான் செய்யும் கடைசிப் பிரசங்கம்" என்று சொல்லியருளினார். சனங்களுடைய கண்களினின்றும் தாரை அருவிபோலோடியது.

பிரமாதி ௵. கார்த்திகை மீ ௧௮-ந்௳ செவ்வாய்க் கிழமை இரவு (1879. Novr.) நாவலர் அவர்களுக்கு அசௌக்கியங் கண்டது. மற்றைநாள் ஸ்நானம் பண்ணக் கூடாதிருந்தமையால் வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் அவருடைய பூசை செய்யப்பட்டது. அப்போது தாம் அந்தரியாகஞ் செய்து புறமண்டபத்தினின்று புஷ்பாஞ்சலித்திரயஞ் செய்து இருந்தார். மற்றை நாளும் அவ்வாறே செய்தனர். மற்றை நாள் அந்தரியாகஞ் செய்து பூக்களைக் கை நிறைய எற்று, அப்பூக்களை ஒவ்வொன்றாக எடுத்துத் தமது சிரசிலே போட்டுக் கொண்டு அஞ்சலி செய்து திரும்பி வந்து சயனத்தின் மீது படுத்தனர். அன்றிராத்திரி ஐந்து நாழிகை வரையில் அறிவிற் சற்றேனும் பேதமில்லாதவராயிருந்து தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு. அவைகளோதப்படும் போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங்களின் விபூதியணிந்து, உருத்திராக்ஷம் பூண்டு கங்காதீர்த்த முட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானுடைய திருவடிகளிலே சிந்தைவைத்துத் தியானபரராய் இருந்தனர். சற்று நேரத்தால் ஏதோ தம்முள் நினைந்த ஓதுவா மூர்த்திகள் தேவார பாராயணத்தை நிறுத்தினார்கள். உடனே தேவார பாராயணத்தை நடத்தும்படி தமது விரலினாற் சுட்டிக்

குறிப்புக்காட்டி, பின்னு மோதச்செய்து தமது ஐம்பத்தாரும் வயசும் பதினொராம் மாசமுமாகிய பிரமாதி வருஷ கார்த்திகை மீ உக-ல். (1879 Decr 5) சுக்கிரவாரமும் மக நக்ஷத்திரமும், சத்தமி திதியும் கூடிய புண்ணிய காலத்திலே இரவு, ய. நாழிகையிலே ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய குஞ்சித பாதநிழலை யடைந்தார். அந்தோ! தமிழ் நாடும் சைவசமயமுஞ் செய்துகொண்ட தவப்பயன் இம்மட்டேயோ!! என்செய்வேம்! என்செய்வேம்.

அடுத்த நாளாகிய சனிக்கிழமை அவருடைய திருமேனி விபூதி உருத்திராக்ஷ முதலிய சிவ சின்னங்களாலும் பிறவற்றாலும் அலங்கரிக்கப்பட்டு, மிகச் சித்திரிக்கப்பட்ட பூந்தேரின்மேல் ஏற்றப்பட்டு, எண்ணில்லாத சைவ பத்தர்கள் சூழ்ந்துசெல்ல, அருட்பாக்களை ஓதுவார்கள் ஓதிக்கொண்டுவர, வனத்தின் கண்ணே கொண்டுபோகப்பட்டு அங்கே வரணி கரணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்துச் சைவாசாரியரால் சமயவிசேட நிருவாண அந்தியேட்டிகள் செய்யப்பட்டு அன்றிராத்திரி எட்டு நாழிகை வரையில் பரிமளமிகுந்த சந்தனப்பூம் பள்ளிமிசைத் தருவித்துத் தகிக்கப்பட்டது. பாஷாணஸ்தாபனம் முதலிய கிரியைகளும் முறையே செய்யப்பட்டன.

குருபூசைத்தினம்.

“கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவநிலை
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச் - சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர் வீ டுற்றதிரு நாள்.”

“ஆரூரனில்லைப் புகலியர்கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசகனில்லைத் திசையளந்த
பேரூரு மாறுமுக நாவலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்குநீர்மையரே.”

☞ சைவசிந்தாந்தப் பிரவர்த்தகராய், மெய்யடியாராய் எம் நாட்டிற் சைவசமயத்தையும் தமிழ்க்கல்வியையும் வளர்த்த நாவலா அவர்கள் விதேசமுத்தி அடைந்த தினத்திலே அவர் பொருட்டுக் குருபூசை நடத்தல் எமக்கெல்லாம் பெருங் கடனேயாம்.

ஸ்ரீ - ல - ஸ்ரீ.

நாவலரவர்களால்

பரிசோதித்தும், புதிதாய் இயற்றப்பட்டும் புத்துரை எழுதப்பட்டும்

வெளிப்படுத்தப்பட்ட நூல்கள்.

சூடாமணி நிகண்டுரை
சௌந்தரியலகரியுரை
முதற் பால பாடம்
இரண்டாம் பால பாடம்
நான்காம் பால பாடம்
பெரிய புராண வசனம்
நன்னூல் விருத்தியுரை
திருமுருகாற்றுப் படையுரை
திருச்செநதினிரோட்டக யமகவந்தாதியுரை
சிவாலய தரிசன விதி
சைவ தூஷண பரிகாரம் ; சுப்பிரபோதம்
குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்
கந்த ரலங்காரம்
கந்த ரனுபூதி
ஏரெழுபது
திருக்கை வழக்கம்
புட்ப விதி
மறைசை யந்தாதி
கோயிற் புராண மூலம்
திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி
சிதம்பரமும் மணிக்கோவை
உபநிடத வுரை
பட்டணத்துப் பிள்ளையார் பாடல்
அருணகிரிநாதர் வகுப்பு
சைவ வினவிடை, முதற் புத்தகம்
மருதூ ரந்தாதியுரை
திருச்செந்தூர் அகவல்
விநாயக கவசம்
சிவ கவசம்
சத்தி கவசம்

திருவள்ளுவர் பரிமேலழகர் உரை
திருச்சிற்றம்பலக் கோவையுரை
சேது புராணம்
பிரயோக விவேக உரை
தருக்க சங்கிரகம்
உபமான சங்கிரகம்
இரத்தினச் சுருக்கம்
இலக்கணக் கொத்து
தொல்காப்பியச் சூத்திர விருத்தி
இலக்கண விளக்கச் சூறாவளி
கந்த புராணம்
பதினோராந் திருமுறை
நால்வர் நான்மணி மாலை
கோயிற் புராணவுரை
சைவ சமய நெறியுரை
தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரைய
ருரை
இலக்கணச் சுருக்கம்
சைவ வினவிடை, இரண்டாம் புத்தகம்
சிதம்பர மான்மியம்
கந்தபுராண வசனம் (அசுரகாண்டம்வரையில்)
அநுட்டான விதி, முதற புத்தகம்
ஷை இரண்டாம் புத்தகம், குருவாக்கியம்
சிவஞானபோதச் சிற்றுரை
யாழ்ப்பாணச் சமய நிலை
இலக்கண வினவிடை, இரண்டாம் புத்தகம்
இலங்கைப் பூமி சாத்திரம்
நன்னூற் காண்டிகையுரை
பெரிய புராண சூசனம்
திருவிளையாடற் புராண வசனம்

அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடிந்தவைகள்.

சிவராத்திரி புராணம்
அநுட்டான விதி, மூன்றாம் புத்தகம்
சிவ பூசா விதி
சிராத்த விதி *
போசன விதி

நன்னூல் விருத்தியுரை ; இரண்டாம் பாகம்
நைடதவுரை
குருசிஷ்யக்கிரமம்
பூசைக் கிடம்பண்ணும் விதி
தருப்பண விதி *

எழுதத் தொடங்கியவைகள்

தேவாரம்
அகராதி (தமிழ்)
அகராதி (இங்கிலிஷ் - தமிழ்)
அகராதி (சமஸ்கிருதம் - தமிழ்)
தருக்க பரிபாஷை

இரகுவம்சம்
உபதேச காண்டம்
இலக்கண வினாவிடை முதற் புத்தகம்
சமஸ்கிருத வியாகரண சாரம்

* இந்நூல்களை, மாதகல் ஸ்ரீ. சு. ஏரம்ப ஐயர் அவர்கள் தம் பெயரால் அச்சிடுவித்தனர்.

உ

கணபதி துணை.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ. ஆறுமுக நாவலர் அவர்கள்

இயற்றியருளிய

தனிப்பாமாலை.

பெரிய புராண வசனத்து விநாயக வணக்கம்.

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
    னரும் பொருளைச் சிவனார் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
    யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
    கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
    கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம். (க)

சித்திவிநாயகர்.

சீரேறு கருணையுரு வாயவிசு வேசனெடு திகழ்விசா லாட்சி தந்த
    செல்வமே யடியவர்க ளினிதுண்ண வுண்ணத் தெவிட்டாத தெள்ள முதமே
பேரேறு மறிவிச்சை தொழிலென்று மதமூன்று பெருகு மானந்த வடிவே
    பிரணவப் பொருளேயென் னுறவேயெ னுள்ளமே பேசுமிரு கண்ணின் மணியே
காரேறு நெடுமாலொ டயன்முத லியாவருங் காணரிய நினதி ரண்டு
    கழல்பணிந் திடின்மகப் பேறுமுத லியாவையுங் கைகூட் டலரி தாகுமோ
வாரேறு களபபரி மளமருவு முபயமுலை வல்லை யுளமகிழ் கொழுநனே
    வண்டுமது வுண்டுலவு தண்டலை யராலிநகர் வாழ்சித்தி வேழ முகனே. (உ)

விசுவநாதசுவாமி.

உலகெலா மாகிவே றாயுடனு மாய்நின்ற உண்மையறி வின்ப வடிவே
    ஓங்குமீ சானாதி சத்திபஞ் சகமேமெய் யுருவெனக் கொண்ட முதலே
அலகிலா முற்றறிவு முதலாறு குணங்களா றங்கமென வுடைய பரனே
    அவனிமுதன் மூர்த்தமெட் டுடையனுய்ச் சர்வாதி யட்டநா மங்கொள் சிவனே

இலகுசி ரைந்தொழி லுஞற்றியு முஞற்றிலா தினிதுதிகழ் கின்ற பதியே
எண்ணத் தெவிட்டாத தெள்ளமுத மேயடிய ரிடர்போக்கு சேம நிதியே
விலகலா துன்னைவழி பாடுசெயு மன்பர்க்கு வேண்டுவ கொடுத்த ருளுவாய்
விண்டல மளாவிவளர் தண்டலை யராலிநகர் விசுவநா தக்கட வுளே. (௩)

விசாலாட்சியம்மை.

பொன்பூத்த விமயப் பொருப்புதவு புதல்வியே போதவா னந்த வடிவே
பொலியுமெண் ணான்கறம் வளர்த்தருளு மன்னையே போக்குவர வற்ற பொருளே
கொன்பூத்த வயில்வேற் குமரனைத் தந்தநிர்க் குணனிடப் பாலம் மையே
குலவுபரை யாதியைஞ் சத்திவடி வாய்நின்ற கோதில் கருணை வாரியே
மின்பூத்த கொடியிடைகொள் சலசைசலை மகள்பணியு மேன்மையுறு மாதேவியே
மிக்கபா மாலைசாத் திடுமடியர் வேண்டுவன வேண்டியாங் குதவு நிதியே
தென்பூத்த நினதுபத மலரிறைஞ் சிடுமடியர் சிந்தித்த வரமருள் செய்வாய்
செங்கமல மலர்வாவி தங்கிடு மராலிநகர் திகழ்விசா லாட்சி யுமையே. (௪)

(இப்பாக்களின் வரலாற்றைச் சரித்திரச் சுருக்கம் 4-ம் பக்கத்திற் காண்க.)

நல்லைக் கைலாச பிள்ளையார் மீது
மங்கள விருத்தம்.

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொருப செகதீச திருமங் களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த திகழீச திருமங் களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப் பிரகாச திருமங் களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவையெனு மரிவையிற் பெருநேச திருமங் களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதி லொளிர்தேச திருமங் களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற் குபதேச திருமங் களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக் கரராச திருமங் களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச கவினேறு கணரா சனே. (௫)

நல்லைக் கந்தசுவாமி மீது
வாழி விருத்தம்.

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன மாறுமநு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி நெடுவெலிய கவினுலவு தோழ்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில் கரதலத் தினிது வாழி

வருணமர கதவழகு திகழவரு மவுணனெனு மயிலிநெடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னெடுகடவுண் மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர் தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண சடட்சரம் வாழி வாழி. (௬)

(மங்சள வாழி விருத்தங்கள் இரண்டும் நாவலர் அவர்கள் மாணுக்கருள் ஒருவராகிய ஶ்ரீ ம. திருஞான சம்பந்தப் பிள்ளை யிடமிருந்து எழுதிக்கொள்ளப்பட்டன. நவராத்திரி பூஜாகாலத்தில் நாவலரது வித்தியாசாலை மாணுக்கர் தோத்திரஞ் செய்தற் பொருட்டு அவர் பாடிய விருத்தங்களாம்.)

அரிமழம்.

சுந்தரேசர் மீனுட்சி துதி.

திருக்கிளர் கமலத் தயன்முத லமரர் திகழ்மறை முனிவரேத் தெடுப்ப
மருக்கிளர் சோலை யரிமழ நகர்வாழ் வாதனே மறைமுடி விளங்கும்
குருக்கிளர் மணியே யன்பர்த மகத்துக் குலவிய தீபமே யடியேன்
கருக்கிளர் பிறவி நோயொழித் தருள்வாய் கடவுளே கருணைவா ரிதியே. (௭)

மெய்யறி வின்ப வடிவமே நெடுமால் விரிஞ்சனு டரும்பரஞ் சுடரே
மொய்குழற் கயற்கட் கொடியொரு மருங்கு முளைத்தெழு முதியமா மருந்தே
தெய்வத மறையோர் தினந்துதித் திறைஞ்சத் திகழரி மழமுறை சிவனே
யுய்யநன் னெறிநா யேற்கினி தருளா யொருவனே யுலகநா யகனே. (௮)

அவனவ ளதுவென் றுரைத்திடு முலக மாகிவே றுயுள னுகுஞ்
சிவபெரு மானே படைத்தலா தியவைந் திறத்தொழி லுயிர்ப்பொருட் டுஞற்ற
நவவடி வெடுத்த வருட்பெருங் கடலே நவிறரு மரிமழ நகர்வாழ்
பவனெனுஞ் சொக்க நாதனே யெனக்குப் பற்றுநின் பதமலா திலையே. (௯)

அங்கியின் சத்தி யொன்றதே யெனினு மடுதலா தியபல தொழிலாற்
பொங்குபஃ றிறத்த தாதல்போற் பதிக்குப் பொருந்துமோர் சத்திநீ யெனினுந்
தங்கிய பரையே முதலவைந் தானோர் சகம்புக ழரிமழ நகர்வா
ழங்கயற் கண்ணி யம்மையே யுன்ற னடித்துணை யாருயிர்த் துணையே. (௰)

(இந்நான்கு விருத்தங்களும் அரிமழத்தில் முன் அச்சிடப்பட்ட பிரதியில் உள்ளன.)

கதிர்காம சுவாமி மீது

கீர்த்தனங்கள்.

இராகம் - சாவேரி. தாளம் - ஆதி.

பல்லவி.

உன்னிருபாதந் தெரி - சனஞ்செய்த பின்னரே
யுவகைக்கடலு - லாழ்ந்தேனே.

அநுபல்லவி.

தன்னிகரில் கதிரை - தனில்வாழும் போதனே
சற்குண்ய பரிபூரண - சண்முக நாதனே. ... (உன்)

சரணங்கள்

ஆதி நடுவிறுதி நீங்கினேய் - சித்தோ
டசித்தாம் பிரபஞ்சமுற்றுந் - தாங்கினேய்
சோதிவடிவாய் நின்ற சூலபாணி புதல்வா
சூரனுதி மூவரைத் தொலைத்தருளும் முதல்வா. ... (உன்)

சனன மரணத்துயரத் தாழ்கின்றேன் - இன்னுஞ்
சஞ்சலச் சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பராமுகஞ் செய்யா தெனக்குருகுவா
யேதிலாத முத்தி யின்பந் தருகுவாய் ... (உன்)

அருளுங்கருணைக் கடலல்லையோ - முன்ன
ரமரரிட ரகற்ற வில்லையோ
ஒருவலெனது நோயை யோட்டுதலருமையா
உனையேநம்பிவந்தேனுக் குருகாமை பெருமையா ... (உன்) [மக]

இராகம் - துசாவந்தி. தாளம் - சாபு.

பல்லவி.

ஏனிந்தக்கேடு நெஞ்சே - ஐயையோ - உனக்
கேனிந்தக்கேடு நெஞ்சே.

அநுபல்லவி.

மோனந்திகழுஞ் சைவ - முனிவருறை கதிரை
முருகா - முருகா - முருகாவென் றுருகிலை .... (ஏனிந்த)

சரணங்கள்.

பொய்யாமுலக வாழ்வை நீங்கி - நித்திய
பூரணானந்த வாழ்விற் றேங்கி
மெய்யா மறிவானந்த - வேதமுடிவாய் நின்ற
விமலா - விமலா - விமலா வென்றுருகிலை .... (ஏனிந்த)

சனன மரணத் துயர் தீரு - மது
தானுயமரு நிலை சாரும்
கனகசபை நடனக் கருணாகரன் முன்றந்த
கந்தா - கந்தா - கந்தாவென் றுருகிலே .... (எனிந்த)

அங்கியிடை மெழுக தென்னக் - கசிந்
தளவிலானந்த மிகத்துன்ன
கொங்கு கமழ் கடம்பு குல்லையொடு புனைந்த
குகனே - குகனே - குகனேயென் றுருகிலே .... (எனிந்த) [௰௨]

இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி

பல்லவி.

நிருமல பரசிவசண்முகா - சுத்த
நித்திய - சத்திய - வித்தகனுங்குக

அநுபல்லவி.

திருவுலாவு மிலங்கையின் மேவிய
சீர்திகழுங்கதிர் காமத்துறைதரு
சிற்பரா - அருள் தற்பரா - அன்பர்
சிந்தையுகந் தமருந்தனி வேலனே .... (நிரு)

சரணங்கள்.

பரமனருளும் புதல்வா - பரமானந்தசிவ
பத்தர்க் கருளு முதல்வா
கருணைசேர் சச்சி தானந்தவடிவே
கணிப்பிலாச்சது மறையின்முடிவே
கந்தனே - உமை மைந்தனே - என்னைக்
காத்துமலவிருள் தீர்த்தினிதாளுவாய் ... (நிரு)

அறிவுக்கறிவாய் நின்றவா - கிரௌஞ்சகிரியுடன்
அவுணர்கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
சூர்ந்துளாயணி மருமன் மருகா
கோலனே - புரிநூலனே - ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள் .... (நிரு)

அயனைச் சிறையில்வைத்தவா - அகத்திய முனிவனுக்
கருளோடுபதேசித்தவா
வியனுலகமாருக் கருள் தாளா
விண்ணுதல் வள்ளிக்கொடி புணருந் தோளா
மெய்யனே - எமனுதயனே - அர
விந்தமலர் நிக ரும்பாதந் தந்தருள் ... (நிரு) [௰௩]

இராகம் - ஆகிரி. தாளம் - சாபு.

பல்லவி.

இத்தனை கொடு வேதனைப்படல் கண்டு முமக்
கின்னு மிரக்க மில்லையா

அநுபல்லவி.

சித்தி முத்திகடருந் தெய்வ மாணிக்க நதி
சேருங் கதிரை நகர் - திகழ் சுப்பிரமணியரே நான் (இத்தனை)

சரணங்கள்.

அண்டரிடரகற்றும் போதரே - அன்பர்
அனவரதம் பணி பொற் பாதரே
கண்டங்கரிய சோதி காதலரே யெனது
கண்ணேயென் கண்மணியே காருண்ய சாகரமே ... (இத்தனை)

எள்ளினெய் போலெங்கும் நிறைவீரே - உமக்
கென்றுயர் தெரியாதோ அறைவீரே
தெள்ளுந் தமிழால் கவிதார் தமக்கு மருள்வீரென்று
தீதிலருணகிரி தேவர்சொல் நம்பிவந்தேன் ... (இத்தனை)

உம்மையல்லாது துணை யறியேனே - துய
ரோட்டிவீரோ வுமும்மைப் பிரியேனே
இம்மை மறுமை வீடு மூன்று மும்மாலே யாகும்
இதுவே சத்தியஞ் சத்திய மென்று துணிந்து வந்தேன் (இத்தனை)

[கச]

இராகம் - கல்யாணி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

என்மே லிரக்கமில்லையா சாமி - புதல்வனுக்குத் தந்தை
இரங்காதிருந்தா லென்சொல்லும் பூமி

அநுபல்லவி.

தன்னிகரில்லாக் கதிரைமலை வாழுந்
தற்பரானந்த சாமிசுகாரம்ப
வுன்னுபய சரணும்புய மல்லாம
லொன்றும்புக லிடமின்றினியாகுதல் .... (என்)

சரணங்கள்.

துய்யசடட்சரத்தோ ரெழுத்தையுஞ்
சொல்லிலே னென்செய்வேன் சிறியேன்
கோடி சூரியப் பிரகாசமான வரோதய சுவாமி
உய்வகையறியேன் செய்யநின் னாமத்தை நினையேன்

பவந்தீரா துலேகின்றேன் வினையேன்
அன்னை தெய்வமுநீயே அடியேனுக்குய் வருள்வாயே
அருள்சேர் சீலா - பாலா கோலா
நல்லனு கூலா - செங்கதிர்வேலா - இன்னும் ... ... (என்)

நித்தியபரி பூரணுனந்த நிருமலா
நீதமுருகா பாம்பில் நிருத்தம் புரியும்
பரந்தாமனுக்கு நிகரில்லாத நன்மருகா
துத்திய வள்ளி மணுளா பல தொண்டர் வணங்கிடு தாளா
என்மேற் சூதை யெண்ணுதே
என்னையிந்த வாதை பண்ணுதே
கனமிகு துய்யா - மெய்யா - பொய்யா
பன்னிருகையா - அய்யா - செய்யா - இன்னும் .... (என்)

ஆறுமுகவென் றழைக்கும் கீரனுக்
கருள்புரிந்திடு முதல்வா
அனவரதமுந் துதிசெயுந்திரி யம்பகற்கொரு புதல்வா
சீறுமவுணனை வென்ருய் குறத் தேவிமுன் வேங்கையாய்நின்ருய்
நின்மேற் சிந்தனைவையே
ஞெருக்காலும் வந்தனை செய்யேன்
கன ஈழதேசா - ராசா - விலாசா
நல்லையில் - வாசா - நேசா - ஈசா - இன்னும் ... ... (என்)

[கரு]

இராகம் - அசாவேரி. தாளம் - ஆதி.

பல்லவி.

சிவகுரு நாதருக்குச் செய மங்களம் - நல்ல
செங்கமல பாதருக்குச் செய மங்களம்.

அநுபல்லவி.

பவமறுத் தெனையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனிவர்களுளந் தங்கருளாளருக்குச் ... ... (சிவ)

சரணங்கள்.

கன்னி வள்ளி நேசர் பாவ நாசருக்கு மங்களம்
கதிர்காமவேல ரீழ தேசருக்கு மங்களம்
மன்னுமடியார்க் கருளு மாசில் குமரேசருக்கு
துன்னிய வனந்தகோடி சூரியப் பிர காசருக்குச் .... (சிவ)

மங்கையுமை பாலர் வடி வேலருக்கு மங்களம்
மன்னுமறை நூலரனு கூலருக்கு மங்களம்
புங்கமிகு சிவகாம போதக சுசீலருக்குச்
செங்கையில் விளங்குவளைத் தெய்வயானை லோலருக்குச் ... (சிவ)

சங்கரன் குமாரர்குலத் தாரருக்கு மங்களம்
தன்னிகரில்லாதநல் லூரருக்கு மங்களம்
பொங்குசினத் தவுணரைப் போரில்வென்ற வீரருக்குத்
துங்கவகத்தியற்கருள் தோமிலதி தீரருக்குச் ... ... (சிவ)

[கசு]

(இக் கீர்த்தனங்கள் சின்னத்தம்பிச் செட்டியார் குமாரர் விநாயக மூர்த்திச் செட்டியார் இயற்றிய "கதிரை யாத்திரை விளக்க"த்திலுள்ளன. "செந்தமிழ் நாவலர் சிறப்புடன் கூடும்- அந்த நற்சபைதனி லறுமுக நாவலன் பாடிய கீர்த்தனம் படித்தரங்கேற்றி" என அதன் சிறப்புப் பாயிரத்துட் சொல்லப்பட்டபடி, இக்கீர்த்தனங்கள் புலமையோடு சங்கீதத்திலும் பேர் வாய்ந்தவராகிய குறித்த விநாயக மூர்த்திச் செட்டியாரால் கதிர்காம சுவாமி சந்நிதானத்தில் அரங்கேற்றப்பட்டன.)

"சனி நீராடு" என்னும் முதுமொழி உரையைக் குறித்துச் சொல்லிய

சீட்டுக்கவி.

மக்கள்குரு தத்தர்நிட தத்தர்பிற மன்னர்தொழ வளமிகுதொன் மதுரை நீங்கி
மத்தகய மொத்ததிறல் பெற்றிடு புவிச்சக்ர வர்த்தி சிங்காரியன் முதல்
மன்னரரசாளுமிட மென்னவள ரியாழ்ப்பாண மருவு நல்லாபுரியினன்
மயில்வாகனச்சுப்ர மணியசுவாமியின்றிரு மலரடி துதிக்குமடிமை,

திக்கனைத்தும்புகழு முத்தமமிகுத்திடுஞ் செந்தமிழ்க் கலை ஞாபகன்
சீர்மருவு கந்தனருள் மைந்தனு மாறுமுக தீரனெழுதுங் காகிதம்
செப் "புதயதாரகை" ப் பத்திரமச்சிற்பதித் திட்டுப்ர சித்திசெய்யும்
திகழ்முகாமைக்கார ரெதிர்கொண்டு துயர்விண்டு சித்தமகிழ் கொண்டு காண்க,

தக்கசனி நீரா டெனுமவ்வை யார்மொழி தனக்குரை தனைப் பகரிடிற்
சனிவார மதிலெண்ணெ யிட்டுவெந் நீரினிற் றலை முழுக வென்பதாகுஞ்
சத்திய விசித்திரகவி ஞர்க்குளு சிதப்ரபல்ய சற்குண மகத்துவமிகும்
தணிகைவளர் கந்தப்ப தேசிகனளித்திடுஞ் சரவணப் பெருமாளெனும்,

மிக்கபுலவனு மிங்ஙன முரைவகுத்தனன் மிகுசோதிடங்களாலும்
வித்தக வறப்பளீச் சுரசதக முதலான வேறுபல நூல்களாலும்
மேலான பொருளிதென வேயுணர்க வேறுசில வீணர்பொருள் வேறு பகர்வார்
மெய்மையைப்பற்றி வள்ளுவர்சொன் மூன்றுங்குறள் விளங்கிலார் போலு மன்றே.

[கஎ]

(இது "உதய தாரகை" என்னும் பத்திரிகையிருந்து எடுக்கப்பட்டது.)

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்திற்.

செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த

மகாவித்துவானுகிய ம.ா.ா.ஸ்ரீ. நல்லூர் மனப்புலி முதலியார்

குமாரர்

சரவணமுத்து முதலியார் பேரிற்

சரமகவி.

(இவர்க்கு வயசு-சஙு)

முப்பத்தாறு சீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

சீரேறு சகவருட மாயிரத் தெழுநூறு சேருமறு பத்தே ழினிற்
றிலகுவிசு வாவசெனும் வருடமதின் மகரமதி திக்கு நாலாந் தேதியிற்
றிருவளர்பொன் வாரமக நாளபர பக்கநிகழ் திருதியை யெனுந் திதியினிற்
செறியுமா யுட்கம்ப யோகவணி கலகரண தினகும்ப லக்கி னததே
தென்னிலங் காபுரியி னுக்குள்வளர் யாழ்ப்பாண தேசமுழு துஞ்சி றக்கத்
தெய்வசர வணபவசண் முககுமர குருபரன் றிகழ் நல்லை யமர் சிரேஷ்டன்,

பேரேறு மிப்பூ தலஞ்சிறி தெனும்படி பெரும்புகழ் படைத்த மகிபன்
பெருமை பொறை.யறிவொடருண் முதலியநல் குண மொடு பிறந்துடன் வளர்ந்த நிபுணன்
பீடேறு மாணவக ரகவிரு பேரத்திப் பிறங்கு கற்பூர தீபம்
பிரதாப மிகுமாதை நகர்மனப் புலிமுதலி பெறவரு சபாரஞ்சிதம்
பேசருமி லக்கணவி லக்கியக் கடலுண்டு பெரிதுதேக் கெறியு மேகம்
பேதையே யௌஞ்சக மெனுஞ்சிலையின் மீதுமலர் பெருமிதவி கசித கமலம்,

காரேறு மிமையவர்கள் பதியனைய வுயர்பிரபு கட்குநவ ரத்ந மகுடம்
கட வுளர்த மமுதநிக ரதிமதுர முத்தமிழ்க் கவிமதம் பொழி குஞ்சரம்
காதன்மிகு கலைவாண ரிதய மண் டபமீது கவினர சிருக்கு நிதியம்
கனவெழில்கொண் மதனுமதி சயமுறு சவுந்தரிய கனகவிக் கிரக சொருபம்
கருதலர்க ளௌமருவு கவிஞர்கிடு கிடெனவெழு கழகப்ர சங்க சிங்கம்
கருதுவே தாந்தசித் தாந்தசம ரசசிந்தை கைவந்த கருணகரம்,

சாரேறு பசுபாச பதிலக்ஷ ணப்ரபல சைவாக மப்பொக் கிஷம்
தத்யப்ர காசசர வணமுத்து முதலியாந் தன்னிகரி லாத குரவன்

சாசுவத நிர்மல வியோமவிசு வாதீத சத்திய நிராலம் பமாய்ச்
சர்வபரி பூரணவ கண்டதத் துவமாய்ச் சராசர வணுக் கடந்த
சச்சிதா னந்தபர நிஷ்களா னந்தமாய்ச் சதுமறையின் முடிவி னிலகுந்
தற்பரசு காரப்ப சுத்தசிவ ஞருபய சரணமலர் மேவி னனே. [கஅ]

இஃது.

இவர் மாணுக்கராகிய மேற்படி நல்லூர் க, ஆறுமுகவராற்
சொல்லப்பட்டது.

சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்திற பதிப்பிக்கப்பட்டது.

(இச்செய்யுளின் அச்சுப்பிரதி, நாவலர் அவர்களோடு ஒரு சாலை மாணுக்கராய் மேற்படி முதலியாரிடத்தே கல்வி பயின்ற வேலாயுத கார்த்திகேய உபாத்தியாயர் அவர்களது புத்தகசாலையிலிருந்து எடுத்து, அவர் மருகர், ஸ்ரீ. ந. ச. வைத்தியலிங்கபிள்ளை அவர்களால தந்து உபகரிக்கப்பட்டது.)

நாவலர் அவர்கள் சீஷரும்

அவர்கள் வித்தியாசாலை உபாத்தியாயருள் ஒருவருமாகிய

வி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் தேகவியோகத்தைக் குறித்த

இரங்கற் பாமாலை.

கொச்சகம்.

1. என்னுடைய கண்மணியே எனதன்பர் சிகாமணியே
பின்னமறு புகழ்பொலிசுப் பிரமணிய பெருந்தகை நீ
என்னையுனக் கன்னை பிதா வினிய குரு வென்று முன்னர்ச்
சொன்னதென்னை பின்னரென்னைத் துறந்ததென்னை சொல்லாயே (க௯)

2. புன்புலா லுண்ணுமை போலறமற் றொன்றுமிலை
யென்பதுபல் லோரறிய வியம்பியவர் தமைத்திருத்து
நின்பெருமை செவிமடுப்பச் செவிமடுப்ப நின்பெருமை
என்பெருமை யென்றுகந்தே னினியாது செய்வேனே. (உ௦)

3. சிவநெறியி னன்புடையார் போனடித்துஞ் சிவதீக்கை
அவநெறியென றிகழ்ந்தொழியு மந்தணரைப் பொருட் படுத்தும்
பவநெறிசா ராதுசிவ பத்தரையே பொருட் படுத்துந்
தவநெறிநின் னெறியிதுவென் றனைநின்பாற் பிணித்ததுவே. (உக)

4. வேதனந்தான் கிடைத்திடினுங் கிடையாதுவிடினு நிற்கோர்
மாதனமென் கருணையென மதித்தெனது சமூகமமர்ந்
தேதமகல் பணிவழுவா தியற்றியவென் னிருநிதியே
காதனது பொருதுநினை நணுகுவித்தான் றனதுலகே. (உஉ)

5. உன்னோடிரா மேச்சுரநன் கோதுதிருச் சீரலைவாய்
முன்னையபஃ றலங்களுக்கும் முழுத்தொண்டு புரிந்துகொண்டுன்
பின்னர்வரும் பெரும்பேறு பெறுவேனென் றெனக்குரைத்த
நின்னையிழந் தேனந்தோ வந்தோவிந் நீணிலத்தே. (உங)

6. இப்பதியிற் சிவகதைக ளெந்நாளும் படித்திடவும்
செப்பருமெய்த் திருத்தொண்டர் குருபூசை செய்திடவும்
ஒப்பரிய திருமடமொன் றுண்டாக்கல் வேண்டுமென
எப்பொழுதும் புலம்பினையே யினியெங்ஙன் முற்றுவதே. (உச)

7. என்னிடத்து நெடுங்கால நேரேகற் றெத்தனையோ
நன்மையெலாம் பெற்றபலர் நாடறியப் பகைத்தகன்ற
வன்மைமனத் தினராக மதித்தென்சொல் வழியொழுகு
நின்னையிழந் துயிர்வாழ்வேன் நெஞ்சமிக வலியேனே. (உரு)

8 இருநிலத்தோர் கோபியென வெடுத்துரைக்கு மென்சினத்துக்
கொருபொழுது மிலக்காகா தொழுகியென துளமுழுதும்
உருகியகா தலிற்கொள்ளை கொண்டவுற வினன்சீர்
பெருகியசுப் பிரமணிய பெருந்தகையோய் நீயன்றே. (உசு)

9. எத்தனையோ துயருழந்து மெமதிறைவன் றனைச்சிறிதுஞ்
சித்தமதி னோவாது திருநாம முச்சரித்துப்
பத்தியுட னவனருட்பாப் படித்திடக்கேட் டினிதுகந்த
இத்தகைய நினதுசெயல் யான்மறக்கற் பாலதன்றே. (உஎ)

10. ஐந்தெழுத்துப் பிரமாங்க மணிமிருத்துஞ் சயபதமாம்
மந்திரங்கோ ளறுபதிகம் மாசறுநீற் றுப்பதிகம்
பந்தமறு முருகாற்றுப் படையினியான் மந்திரித்த
முந்துதிரு நீறுதினம் முப்பொழுதும் பெற்றனையே. (உஅ)

11. பொருவாநின் னுடறீண்டிப் பூதியையா னணிபொழுது
திருநீறே யருமருந்து திருநீறே யருமருந்தென்
றொருவாத பேரன்போ டுரைத்திடுநன் மதுரமொழி
பெருகார்வத் தினிக்கேட்கப் பெறுவேனோ பேசாயே. (உகூ)

12. பிறரிடத்துச் செல்லாவெம் பெருமானார் தமியேன்மாட்
டுறவினெழுந் தருளல்கண்டோ ருளைந்துபுறம் பழிப்பரென
அறநினைந்து புலம்பியமெய் யன்பவினிப் பிழைத்திடினப்
புறவுரைகேட் பரிதென்றோ புவியினைவிட் டேகினையே. (ஙய)

13. என்பொருட்டென் ஞகிரியன் எத்தனையோ பாடுபட
முன்செய்தவ மென்கொலியான் முடிந்தழிபு மறுமையவன்
பொன்செய்திரு வடித்தொண்டு புரிவனென நுமர்க்குரைத்த
நின்சொல் செவிமடுப்ப நெடிதெனுள நெக்கதுவே. (ஙயக)

14. நிருவாண தீக்கைபெறீஇ நிகழ்சிவசித் தாந்த நூல்
பெருகார்வத் தென்னுழைநீ பெறுங்காதல் காட்டினையே
முருகார்சுப் பிரமணிய முன்னமது முற்றவினி
வருவாயோ வென்னுழைநீ வாராயோ வறிகிலனே, (௧௨)

15. உன்பாத மிகவருந்த வொருசிறியேன் மனைக்கணியான்
இன்பார விருபொழுது மெழுந்தருள்வ தென்னையெனத்
துன்பார நெருநலினீ சொற்றனையின் றென்மீதின்
அன்பாலோ யான்வருந்தா தரனுலக மடைந்தனையே. (௧௩)

16. நின்றிரிபுண் டரநுதலும் நின்குறுநன் னகைமுகமும்
நின்றணிந்த கவினடையும் நின்கைபுதைத் திடுவாயும்
நின்றனெதுக் கியகலையும் நின்பணிந்த வின்மொழியும்
என்றனெதி ரினியெந்நா ளெய்திடயான் பெறுவேனே. (௧௪)

17. நினதுள்ளஞ் சிவார்ச்சனையின் நேசமுடைத் தென்பதறிந்
தெனதுசிவ பூசையொடு மெனதன்ப நின்பொருட்டு
மனவிருப்பிற் சிவலிங்க மற்றொன்று பூசிப்ப
உனதுடல மொருவியர னுலகடையப் பெற்றனையே. (௧௫)

18. யான்பிழைத்தல் வேண்டுமென்ப தெனதைய நின்விருப்பே
யான்பிழையா தேமரிக்கி னென்கிரியை யனைத்துநீ
தான்பிழையா தியற்றுவிக்க வென்றுமொழிந் தனையவ்வா
றியான்பிழையா தியற்றுவிக்க யார்கருத்து முடிந்ததுவே. (௧௬)

19. இக்காலத் தென்னுசா னீண்டிருப்ப யானிறக்கின்
நற்கால மென்காலம் நாடிதைவிட் டவனகலும்
பிற்காலத் தியானிறக்கிற் பிழையெனநின் மருகனுக்கு
முற்காலத் தியம்பினையே நின்கருத்து முற்றியதே. (௧௭)

20. நின்செனன நாளிதனி னின்பெயரால் வேளூர்க்கும்
பொன்செய்திரு மன்றினுக்கும் பூசை நிகழ்ந் திடவீண்டுன்
கொன்செயுட லொருவியிறை குஞ்சிதபா தம்பொருந்த
என்செய்தவ மென்செய்தவ மிதுசால வியப்புடைத்தே. (௧௮)

(இப்பாக்கள் "சுப்பிரமணியபிள்ளை பேரிற் சரமகவித் திரட்டு" என்னும் அச்சுப்பிரதியிலிருந்து எடுக்கப்பட்டன.

தனிப்பாமாலை

முற்றிற்று.

அநுபந்தம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ. ஆறுமுக நாவலர் அவர்களைக்

குறித்த

துதி மாலை.

திருவாவடுதுறை யாதீனத்து மகா வித்துவானாகிய

திரிசிரபுரம் - ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடல்.

விருத்தம்.

"மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பல தெரிந்தோன் சிவாகமநூற் பரவை மூழ்கி
யுன்னுமற பூதியெனும் விலைவரம்பி லாமணிகை யுறக்கொண் டுள்ளா
னின்னுநய குணத்தினனச் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்."

"நீடுபுகழ்த் திருக்கேதீச்சரந் திருக்கோணசல மிங்கிலவாநின்ற
நாடுபுகழ்த் தலம்பொலி யாழ்ப்பாணத்து நல்லூர் வாழ் நகராக்கொண்டோன்
றேடுபுக ழுருவமைந்த கந்தவேடவத்துதித்த செல்வன் யாரும்
பாடுபுக ழாறுமுக நாவல னவ்வா றச்சிற் பதிப்பித்தானே."

"அகத்தியந்தொல் காப்பியமுன் னய பல விலக்கணமுஞ்
சகத்தியல் பல் லிலக்கியமுஞ் சாற்று பரமத நூலு
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சுகத்தியலு மனுபூதித் தோன்றலா யமர் பெரியோன்."

"மாறுபடு பரசமய வழியனைத்து மறமாற்றி
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ரருணெறியே
தேறுபடும்படி வளர்த்துத் திகழுமாதவ முடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மை முழுமையு முணர்ந்தோன்."

"கருள்விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போன்
றெருள்விரவு சுத்த சைவ சித்தாந்தப் பெருஞ்செல்வ
னருள்விரவு பரவுபுக ழாறுமுக நாவலனே."

ஆசிரியப்பா.

"மன்னுகோணசல மாகேதீச்சர - மென்னு மிரண்டு மிரண்டு கண்ணகப் - பெற்றவீழத்திற் பிறங்கும் யாழ்ப்பாணத் - துற்றபல்வளனுக் குறைவிடனுகிச் - சொல்லூர் கழனி சூழ்தரக் கொண்டு - செல்லூர் பொழிலாற் சேர்ந்துல களந்து - வில்லூர் மாட மிகக்கொடு பொலியு - நல்லூர் வாழ்க்கை நயந்தரு ளறிஞன் - கந்தவே டவத்திற் கருதரன்பான்முன் - வந்தவே ளென்ன வந்தவதரித்தோ - னீற்ரெடுகண்மணி நிறையப்பூண்பாற் - போற்ருெடுபொலி யும் புண்ணியபுருட - னவநெறியாய வனைத்துங்களைந்து - சிவநெறிவளர்க்குந் திப்பியகுண த்த-னெழுத்துமுதலாக வியம்பிலக்கணமு-வழுத்திலக்கியமும் வரம்புகண்டெழுந்தோன் - சமயம்விசேடந் தருநிருவாணமென்-றமையுமுத்திக்கையு மடைவுறப்பெற்ருேன்-சுமங்கல விசேடச் சுருதிபாமூல - கமங்களின்முப்பொருள் கருதுபேரருளான் - யுத்தியினமைத் துணர்ந் தோங்கனுபூதி - சித்தியுற்றமைந்த சிவசிந்தாமணி - கற்றுணர்புலவ ருட்களிக்கு - முற்றுணராறு முகநாவலனே"

ஸ்ரீமத் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் மாணுக்கராகிய

ஸ்ரீ. தியாகராசச் செட்டியார் பாடல்.

ஆசிரியப்பா.

"செந்தமி ழென்னுஞ் சுந்தரமங்கை - கந்தரத்தழகு களிமங்கலநா - ணிலக்கணமனைத்து நலக்கவிளக்குந் - துலக்கமிகுந்த தூண்டாவிளக்கும் - புணர்தருமின்ப மணவுறுபுராண - முணர்வோர் யார்க்கு மொளியுறு நேத்திர - நல்லறிவுறுத்தித் தொல்பவந் தொலைக்கும் - பல்கலைகட்கெலாம் புல்லுமோரில்லம் - பொய்தெரித்தகற்றி மெய்யிது வென்னுஞ் - சைவசித்தாந்த தெய்வவைப்புக் - கண்ணுபுண்ணியங்கட் கண்ணியவுயிராந் - தண் ணியமாசிவ புண்ணியப்பிழம்பு - சிவனடியவரைச் சிவமெனமதிக்குந் - தவமதுவளர்க்கு மவமறுசீல - னென்னுளங்குடி கொண்டிருக்கு - மூன்னுசீராறு முகநாவலனே"

"தென்மொழியென்னு மன்பெரும்பௌவ - மொருங்குகுடித்த பெருங்கும்பமுனிவ - ெனல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியமுத - விலக்கணமெல்லா நலக்கவைத்தடுக்கிய - திருவநீண்டவொரு பெரும்பேழை - யாரணம்புகலும் பூரணபுராணனே - பொருளெனப் புகலும் புராணவாகரஞ் - சொல்பலசமயமாந் துகளறவடித்துச் - சமயாதீதமாஞ் சைவ சித்தாந்தத் - தெய்வவாரமுதம் பெய்துநிறைத்துப் - பொருவறவைத்த பூரணகும்பம் - பேறுபெரிதடைந்த வாறுமுகநாவலனே"

மகாவித்துவான்

திரிசிரபுரம். ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாணாக்கர்

சோடசாவதானம்

சுப்பராயச் செட்டியார் பாடல்.

ஆசிரியப்பா.

"மன்னியபிறப்பின் வண்பயனிதுவெனத் - திடமுறவுணர்ந்து வடமொழியோடு - பொருந் தத்தெரிந்து திருந்தப் பதித்தனன் - பொற்பலர்பசுந்துணர்க் கற்பகப்பொழிலொடு - சோ ழமைகொள்ள வானளாயோங்கு- மிளமரப்பொதும்பர் வளமனைவாழ்க்கையர்- விருந்தினர் தம்மைத் திருந்தியமுகத்தோ - டெதிர்தழீஇயின்சுவை பொதிதருமடிசி - லூட்டியுவக்குங் காட்சியை நிகர்ப்ப - வண்டினமுவப்ப மலர்ந்தமலர்முகங் - கொண்டெதிர்தழூவிக் கொழு மதுவூட்டு - மூழியல்வளஞ்சா லீழநன்னாட்டின் - மாச்சீர்காய்ச்சீர் கனிச்சீர்விளச்சீர் - பூச் சீர்நிழற்சீர் பொதுளியைந்திணைப்பொரு - ளகமும்புறமுந் தகவுறத்தழூவி - யணியியல் விளக்க மணிதரப்பொருந்திக் - குலவிய நுண்பொருட் புலமையான்றோர் - நுவன்றகவின்ற கவித்திறங்கடுக்கும்-பீடுயர்செல்வ நீடும்யாழ்ப்பாணத்-திருநிலமிமிசை யியங்குநலனெலா- மொருங்குதிரண்டம் மருங்கினிலவலா - லனைவரும்வியந்து வனைதரப்புகழ்ந்து - நல்லூ ரென்னு நல்லூராளி - யலகில்பல்சமயக் கலகநூலென்னுங் - கான்யாறடைகரை கண்டுளந் தெளிந்து - தானிகரதுல சைவநூலென்னும் - பெருநதியுவட்டி னொருவழிச்சென்று - சைவசித்தாந்தத் தெய்வமாக்கடலை - நணுகியாங்கதனுட் டுணிவொடுதிளைத்துச்- சிவபோக மென்னுந் தெள்ளமுதருந்தித் - தேக்கெறிந்தென்றுஞ் செருக்கும்பெரியோன் - கனவினு நன்னடை தணவாச்சீலன் - மனமொழிசிறிது மயல்வழிபுகுத்தா - தனகனதடிக்கி ழமை தரவொடுக்கியோன் - கண்ணககிலத்தி னண்ணியமன்பதை - யுள்ளத்தளவிற் கொள்ளக் கொடுக்குங்- கல்வியிற்பெரிய சொல்வன்மையினோ-னென்னொருநாவாற் பன்னவமையா - தெனப்புவனத்தார் தனித்தனிப்புகல - வுரவுநீர்வரைப்பிற் பரவியபுகழோ - னென்னுள நோக்க மிலங்கச்செய்வோன் - மன்னியசிறப்பின் வரநதிகுலத்தோன் - கடிதவில்வாய்மை கனிந்த - முடிவில்சீராறு முகநாவலனே"

திருவாவடுதுறை யாதீன வித்துவான்

தாண்டவராய சுவாமிகள் சொல்லிய

ஆசிரியப்பா.

"மூலமுமுரையு முறைமுறைநோக்கி - யேலவேதிருத்தி யெழுதாவெழுத்திற் - பதிப்பித் தளித்தனன் பரசிவதலங்களுட்-கதிர்ப்பொடுமிரண்டுதன் கண்ணுறக்காட்டு-மீழநாட்டைச் சேர்ந் திலங்குபல்வளங்களுந் - தாழ்விலாதுற்றுத் தயங்கும்யாழ்ப்பாண - நகர்தனினல்லூர் நாமமார்புரத்திற் - பகர்தருசைவ பரம்பரைக்குலத்திற் - றோன்றியகந்தவே டொல்லையிற் செய்த - வேன்றநற்றவத்தா லெழில்பெறவுதித்தோ - னியற்றமிழ்ப்பகுதியி னியல்பெ

லாங்கெள்ளி - நயத்தகவுணர்ந்த நற்றமிழ்க்குரிசி - திருக்குறளுரைமுதற் சிறந்தநூலுரை
யெலாஞ் - சுருக்கமின்றறிந்த துகளில்பேரறிவினேன் - கதிதருசைவா கமங்களிற்கழறும்
பதிமுதன்முற்பொருட் பகுதியினியல்பெலாஞ் - சங்கையொன்றின்றித் தவவிசேடத்தா -
லங்கையினெல்லிபோ லளவிட்டறிந்தோ - னரனடியருச்சனை யன்றிமற்றென்றுந் - திர
முறுபவநோய் தீர்த்திடாதெனவச் - சம்புவின்பூசனை தன்னைநாடோறு - நம்பிமெய்யன்பா
னடாத்திடுநல்லோ - னயிட்டிகப்பிரம சாரிநனனிலையிற் - றியக்கறநிற்குஞ் சீர்மைபெற்
றுடையோன் - சங்கரனடியவர் தமைச்சரண்பணிந்தே - யிங்கியான்செய்பணி யென்னென
வியற்றுவோன் - சிவபிரான்மகிமையைச் சீவர்கடமக்குப் - பவமறப்போதனை பண்ணு
பாக்கியத்தோன் - கிரியையான்ஞானங் கிடைக்குமதன்றி - யுரியமெய்ம்முத்திக் குபாய
மன்றென்றுஞ்-சார்கேவலமுதற் சாற்றுமூவிடத்து-மாருயிர்சிவனுக் கடிமையேயென்றும் -
புகல்சிவாகமவாக் கியப்பொருடன்னை - யிகலறத்தேர்வுற் றிதயத்திருத்தினோன் - கல்வி
யிற்காலங் கழித்தலீங்கிவன்கணொன் - றல்லிலகுளத்தவ ரறைதரவமைந்தே - யாறுமுக
னெனவவனி - கூறுமியற்பெயர் கொண்டநாவலனே"

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

ஸ்ரீமத் சிவசங்கர பண்டிதர் சொல்லிய பாடல்.

ஆசிரியப்பா.

"பேசுதேவாரம் பெறுசிவத்தலங்களு - ளாசுதீர்திருக்கோ ணசலங்கதிதரு - மிசைமலி
திருக்கே தீச்சரமிரண்டையும் - வசையறத்தன்வயின் வைத்துமெய்ப்புகழ்பெறு - மீழ
மண்டலத்தினு ளினிதுறீஇவிளங்கித் - தாழ்விலாதோங்கித் தமிழ்நாட்டகத்தோர் - தன்பா
லெங்கணு மன்பால்வசித்திட - வின்பாலுயர்ந்த யாழ்ப்பாணத்தினிற் - பரம்பரனடியவர்
பரம்பரைமுறையாற் - பரம்பிவைகுதலாற் பல்வளம்பல்கிய - நலம்பொலிபெருந்திரு நல்லை
மாநகரினன் - குலம்பொலிகந்தவேள் குமரனுயுதித்தோன் - வடமொழியதனின் மாப்
பெரும்பவுட்கரந் - திடமுறவிளங்குஞ் சிவஞானபோத - மாதியாகமங்களுக் ககல்வியாக்கி
யானமுக் - தீதிலாவுறுதிச் சித்தாந்தசிகாமணி - பிரமாணதீபிகை பிராசாததீபிகை- யுரனுறு
நற்சிவ யோகசாரம்முதற் - பல்பெருங்கிரந்தமும் பரந்தசெந்தமிழி - னல்வாந்தருஞ்சிவ
ஞானசித்திக்குச் - சீரணியுரையுந் தெளிவுறவருளிய - பூரணசிவாநு பூதிமானகிய - திரு
நெல்வேலிச் சீருருடையனும் - பெருமைசேர்ஞானப் பிரகாசமுனிவரன்- வந்தவதரித்த
சுந்தரமரபினன் - பந்தமதகற்றும் பல்பெருந்தவத்தின - னீதியிற்பெருகிய மேதகுநிதி
யினன் - கோதிலாக்குசைநுதிக் கூர்மைகொண்மதியினன் - சுருக்கமிலிலக்கணத் தொகை
பலவிலக்கியந் - தருக்கவேதாந்தப் பெருக்கமுற்றுணர்ந்தோன்-வாதிகளேங்கி வாய்புதைத்
தோட - மேதினியெங்கணும் வியன்புகழ்படைத்தோன் - வயம்பெறுவண்மையன் வர
குணமேரு - சயம்பெறுசைவ சபைக்குயரதிபதி - சிவனேயாமெனச் சிவனடியவரைப் -
புவனியிற்பரிவொடும் போற்றிவாழ்புனித - னக்குமாமணிநீ றணிதிருமேனியன் - மிக்
குயுர்செந்தமிழ் வேதபாராயணன் - மேலாகிபதனி விசேடச்சுருதியா - மூலாகமங்களின்

முப்பொருளருளினுல் - யுத்தியினமைத்துணர்ந் துயரனுபூதி - சித்திபெற்றேங்கிய வித்தகசிரோமணி- யவமுறுபரமத வந்தகாரங்கெடச்-சிவமதகமலந் திகழ்த்திடுந்திவாகரன் - ஒருமூதுடல்கம்பித் தழுதுதொழும்புசெய் - பழுதின்மாணுக்கர் பூரங்குறச்சூழச் - சொல்வளச்சுவையாற் சுருதிகட்கினிதா - யல்கலில்லாத வரும்பெருருள்வளத்தார் - சிந்தையாஞ் செய்புரிஇச் சிவப்பயிர்வளர்க்கு - மந்தமிலின்பத் தமுதமாமழைநிகர் - மெய்யுபதேசம் விளங்கிடவிரித்துரை - செய்திடும்படுதர தேசிகசிகாமணி - மறைதிகழ் பிரணவமன்ன - முறைதிகழாறு முகநாவலனே"

சோணுட்டிலுள்ள வேதாரணியத்தைச்சார்ந்த

குறக்கை வித்துவான்

⟶ ம. ா. ா. ஸ்ரீ. குமாரசுவாமிப்பிள்ளை சொல்லிய பாடல் ⟵

விருத்தம்.

தேறுகலை மதிவிளங்கு புலவர்சிகா மணிபுடைசூழ் தெண்ணீர்வைப்பி
னேறுபுகழ் யாழ்ப்பாணத் திலகியநல் லூரன்மனத் திசைகொள்வேதங்
கூறுசிவ பரஞ்சுடரைக் கொண்டடைந்தார் தமைத்தெருட்டுங் குணமார்ஞான
வாறுமுக நாவல னற்றெளிவுற வச்சிற் பதிப்பித்தருளினனே.

உபய வேதாந்தப் பிரவர்த்தகாசிரியராகிய

ஸ்ரீமத் சுந்தர சிவாசாரிய சுவாமிகள் எழுதியது

"ம. ா. ா. ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட நூல்களி லிவ்வுண்மையைப் பார்த்துணர்வாராக."

"இவ்வுண்மையை ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட பாரதசதாற் கண்டுணர்க."—சிவாதிக்யரத்நாவளி-கசரு, கஉக ம் பக்கங்கள்.

கூடலூர் ஸ்ரீமத் குமரகுரு சுவாமிகள் எழுதியது.

"இராசகோபாலபிள்ளை திருத்தி யச்சிற் பதிப்பித்த புத்தகத்தைப் பாராதீர். ஏனெனில். அவர், முதனூற் கருத்தறியாதவராகையால் வில்லிபுத்தூராழ்வார் செய்த பாரதத்தைப் பெரியோர்வாக்கை அழிக்கக்கூடாதென்று சிறிதும் அஞ்சாது, சிவபரமாயிருந்த பாடல்கள் அநேகத்தைத் தள்ளியும், சில அடிகளை மாற்றியும், சில சொற்களைத்திரித்தும் மனம்போனவாறே அச்சிற்பதிப்பித்தனர். ஆதலால் அதனை நீக்கி, வில்லிபுத்தூரர் பாடினபடியே ஆறுமுகநாவலர் அச்சிற் பதிப்பித்திருக்கும் புத்தகம் ஒன்று சம்பாதித்துப் பாரும் பாரும், உமது ஐயந்தீரும் தீரும். நாவலர் என்னும் பட்டம் அவருக்குத் தகுமேயன்றி உமக்கெல்லாமாதகும். புலியை நோக்கிப் பூனை சூடிக்கொண்டாற் புழுத்துச்சாமேயன்றிப் புலியாமா! அதுபோலக் கல்விக்கடலாகிய ஆறுமுகநாவலரை நோக்கி நீரும் அப்பெயர் தரித்துக் கொண்டாற் பழியும் பாவமும் அடைவீரேயன்றிப் புகழ் அடைவீரா? அடையீர், அடையீர்."—பாத்மோத்தர ரக்ஷாபாசதருப்பணம் ௩௫, ௩௬ ம் பக்கங்கள்.

ஸ்ரீமத் அம்பலவாண நாவலர் ஸ்வாமிகள் எழுதியது.

"நமது நாவலர் ஸ்வாமிகளிடத்தில் நாமறிய உலகறிய விளங்கிய விசிஷ்டகுணங்களாவன: ஈசுரபக்தி, பாச வைராக்கியம், ஜீவ காருண்யம, பிரமஜ்ஞானம், ஔதார்யம் (கொடை), ஆசிருத சம்ரட்சணம் (அடைந்தவர்களைக் காத்தல்), சௌலப்பியம் (எளியராதல), தாட்சண்யம் (கண்ணோட்டம்), மதுரபாஷணம் (இன்சொலுடைமை), ஹிதகாரித்வம் (இதத்தைச்செய்தல), நியாமகத்வம் (நியமத்து நடத்துதல்), லோகோபவாதபயம, சஜ்ஜனசங்கம் (நல்லாரிணக்கம்), பரகுணப்பிரீதி, சிஷ்டஜனபராதினத்வம், பாரம்பர்ய பரிஜ்ஞானம, சௌஹார்த்தம் (நல்லமனமுடைமை), சாதுஜனவாற்சல்யம், நிர்ப்பயத்வம், நிரகங்காரத்வம் (யானெனபதில்லாமை), நிர்மமத்வம் (எனதென்பதில்லாமை), சத்தியவிரதம, சத்தியசங்கல்பம், பிரபுத்வம், நியாயாநுவர்த்தித்வம (நியாயத்தின்பின்தொடர்தல்), தத்வகதனம் (உண்மைபேசல்), ஜிதேந்திரியத்வம், நிஸ்பிருஹத்வம (ஆசையின்மை), பிரபஞ்சதிருணீகாரம் (பிரபஞ்சத்தைத் திருணமாக நினைத்தல்). கௌரவம் ஹேயகுணவர்ஜனம் (தள்ளப்பட்ட குணங்களை விடுதல்) குருலிங்கசங்கமநம்ரதை (குருலிங்கசங்கமவழிபாடு), உபாதேயகுணஸ்வீகரணம் (கொள்ளப்பட்ட குணங்களைத் தனதாகக்கொள்ளல்), ஔசுந்தியம (உபாவுடைமை), சமதிருஷ்டி, சரசோல்லாசம், பிரசந்நதை, விநீதத்வம் (குழைவுடைமை), அகுதோபயங்கரத்வம (பிறர்க்கு எவ்விதத்தும் பயத்தைச் செய்யாமை), ஆர்ஜவம் (நேர்மை), அஹிம்சிரத்வம் (துன்புறுத்தாமை); அநாக்கிராதஷைதந்யகந்தத்வம் (தைன்னியத்தினது மணமும் தெரியாமை), அக்கிரகண்யத்வம, அசலத்வம் (அசையாமை), பிரதிஜ்ஞாதசமாபநம் (செப்வதாக மேற்கொண்டதைசசெய்தேமுடித்தல்), உபகாரகத்வம், ஆத்மசக்தி (தைரியசக்தி), பாரமார்த்திகதிருஷ்டி, அயாசகத்வம், பரமோத்தேசியகத்வம், பாரமயம், பாவகத்வம், ஆசாரசீலத்வம், வாக்மித்வம், ஸ்வாதந்திரியம் (தந்யயத்தனுதல்), ஸௌஜந்யம், இஷ்டஜனபரிபாலனம, சித்தாந்தாபிநிவேசம் (சித்தாந்தத்திற் புகலுடைமை), விவேகம், அநாயாசத்வம், கோப்யயானத்வம, காம்பீரியம், பிரௌடிமை இவைமுதலாக நாலும் மகாத்மாக்களும் கொண்டாடிய பல குணங்களாம." சற்குருமணிமாலை, முகவுரை, கரு, கச ம் பக்கஙகள.

Sir முத்துக்குமாரசுவாமி, Kt.

(The then Tamil Representative in the Legislative Council, Ceylon.)

அவர்கள், இலங்கையில் கிறிஸ்த சமயோபதேசத்துக்காக அரசாங்க பொக்கிஷத்திலிருந்து சகாயதனம் கொடுத்துவருவதுபோல, மற்றச்சமய குரவர்களுக்கும் கொடுக்கவேண்டும் அல்லது முன்னதை நிறுததவேண்டுமென வாதித்தவென்ற (Ecclesiastical Subsidies in Ceylon.) என்ற விஷயம் சட்ட நிரூபண சபையில் 1876-ஆம் ஐப்பசி-மீ 19-உ பிரதிவாதிக்கப்பட்ட தருணத்தில் அக்காலத்துள்ள வெவ்வேறு சாரியர்களைச் சுட்டியபோது ஆறுமுகநாவலர் அவர்களைக்குறித்துச் சொல்லியவை :-

"It is the Hindu of Hindus, Arumuga Navalar in the North! He is one of those Orientals who can measure swords with even such a giant as my Hon'ble friend (the then Queen's Advocate, the Honb'le Mr. R. Cayley) in an argumentative way. His whole life has been spent in preaching and writing against Christianity and he has a following which cannot be despised."

கிறிஸ்த பாதிரிமார்கள் தம் வித்தியாசாலைக்குச் செல்லும் சைவ மாணுக்கர்களுக்கு விபூதியழிப்பித்தல் முதலாம் தீங்குகள் செய்வதைக்குறித்து யாழ்ப்பாணத்துச் சைவசமயிகள் 1884-ம் ஆண்டில் அக்காலத்துத் தமிழ்ப் பிரதிநிதியாயிருந்த கௌரவ. பொ. இராமநாதன் அவர்கள் மூலமாக அனுப்பிய விண்ணப்பம் சட்டநிரூபண சபையிலே அவ்வருடம் மாசி மீ 11 உ பிரதிவாதிக்கப்பட்டபோது :—

Hon'ble Mr. P. Rama Nathan :—

"Intolerance on their (the Missionaries) part, it appears, has varied with varying times and circumstances, but it is specially observed at the present day, ever since the Champion Reformer of Hindus in the Northern Province died in 1879"

His Excellency the Governor (Hon. Sir Arthur Hamilton Gorden G.C.M.G.) Who did you say?

The Hon'ble Mr. P. Rama Nathan,

"The Champion Reformer of Hindus, Arumuga Navalar."

சென்னை "தத்துவ விசாரணி" ப்பத்திராதிபர்.

"இவர் தூற்றுதல் பரமத பானுவாய்ப் பிரகாசிக்கும் ம-௱-௱-ஸ்ரீ ஆறுமுக நாவல ரென்னும் மகா வீரகேசரியைக் கண்டு வெரீஇ அஷ்ட திசாமுகத்தும் ஓடிய வேதாரணியத்துப் பண்டாரங்க ளென்னும் புல்லியர் புல்லுரை ஒக்கும்."

4-ம் இலக்கம், 1878.

"சென்னை முதல் ஈழ மீறாகவுள்ள இத் தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவரும், இலக்கண விலக்கியங்களில் மகா வல்லவரும் சபாப்பிரசங்க சிங்கமுமாகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர்"

5-ம் இலக்கம், 1878.

"சைவதூஷன பரிகார நிராகரண சுப்பிரதீபம் என்னும புத்தகத்தையும், நாயன்மாரென்னும் சொல்வழக்கின் மறுதலையாகிய "வழக்கின்மேல் வழக்கு" என்னும் பொய்ப்பெயர் புனைந்த பத்திரிகையையும் நாமும் பார்த்துள்ளோம். அவற்றினை எழுதினவர்களையும் எமக்குத் தெரியும். இவர்கள் தாமெழுதிய விஷயங்கள் உண்மைதானென்று அறிஞர் சபையில் நிலைநாட்டிக் கொள்ளும்படி சபாப்பிரசங்க சிங்கமாகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வலிந்தழைத்தபோது எதிரிலிருந்து வார்த்தையாட மாட்டாமல் இக்கவியாணைகள் இரிந்தோடினமையையும் யாமறிவோம்"

34-ம் இலக்கம் 1878.

"நாம் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைச் சுட்டிச் சென்னைமுதல் ஈழ மீறாகவுள்ள தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக் கிணையில்லாதவர் என்று உரைத்ததை மனம்பொறுத நீவிர், ஈழம் தமிழ்நாட்டெல்லையாகுமோ வென்று வேடதாரிபோல ஆசியஞ்செய்கின்றீர். "ஸ்ரீ நாவலர் அவர்கள் ஜீவவந்தராயிருந்த காலத்திலேயிருந்த தமிழ் நாட்டுப் பிரபுக்களுள்ளே தமிழ்ப் புலமையும் தமிழ்ப்புலவர்களுக்கு உபகரிப்பும், ஔதாரியமும் ஒருங்குடையவர் ம-௱-௱-ஸ்ரீ இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவரன்றே! இவர் தமிழிலக்கியங்களிலே மிகச் சிறந்தனவாகிய திருக்கோவையார், திருவள்ளுவர் முதலிய நூல்களை அவற்றின் உரைகளோடு பிழையறப் பரிசோதித்து அச்சிட யாரைத்தேடினர்? தற்காலம் தமிழ்வளர்க்கைக்கு மாதருஸ்தானமாகிய திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீ சற்குருநாததேசிக சுவாமிகள் தமது ஆதீனத்திற் றோன்றிய மகாகடின கிரந்தங்களாகிய "இலக்கணக் கொத்துரை", "தொல்காப்பிய சூத்திரவிருத்தி", "இலக்கணவிளக்கச் சூறாவளி" என்னும் மூன்றனையும் பரிசோதித்து அச்சிடத்தக்க வித்துவான் ஸ்ரீ நாவலர் அவர்களே யென்றன்றோ அவரைத்தேடி யங்ஙனஞ் செய்வித்தார். இவர்களேன் தாங்களே அந்நூற்களைத் திருத்தி வெளியிடப் படாது, இந்த இந்துதேசத்துத் தமிழ் வித்துவான்களாலும் உமது இராமலிங்கபிள்ளையாலும் புகழ்ந்து